# மன்மத வருஷம்

வேதவேதாந்த வித்வான் தத்வாம்ருத வர்ஷீ
ஸ்ரீ உ.வே. புலிக்குன்றம் வங்கீபுரம் ஸ்தலசயனாசார்யர்

மன்மத வருஷம் எனும் தமிழ் புத்தாண்டு 14.4.2015 வஸந்த ருது- மேஷ (சித்திரை) மாதம் பகல் 12.30 மணிக்கு செவ்வாய்க்கிழமை தசமி திதி அவிட்ட நக்ஷத்திரம் கூடிய விஷு புண்ய காலமாக பிறக்கிறது. ப்ரபவாவதி 60 தமிழ் வருஷங்களில் இது 29வது ஆக கணக்கிடப்பட்டுள்ளது. மன்மதன் எனும் தேவதையின் பெயராக இப்பெயர் உள்ளது. மன்மதன் என்றால் மனத்தைக்கவர்பவன் என்று பொருள். இவனே காமதேவதையான **மன்மதன் :** ரதியின் கணவனான **காமதேவன்.**

மன்மதனான காமதேவன் சிவனால் எரிக்கப்பட்டு அழிந்து மறுபிறவியில் கண்ணன்-ருக்மிணிக்கு **ப்ரத்யும்நன்** என்கிற பிள்ளையாகப் பிறக்கிறான். எனவே காமதேவனுக்குத் தந்தையான படியால் (தேவன்-பிதா) காமதேவன் என்பது க்ருஷ்ணனைக் குறிக்கும். **காமதேவ: காமபால:** என்கிறது ஸஹஸ்ரநாமம். மகன் ப்ரத்யும்நன் அழகில் அப்படியே கிருஷ்ணன் போலவே இருந்தான். ஒரு சமயம், க்ருஷ்ணனின் அஷ்டமஹிஷிகளும் ப்ரத்யும்நனை க்ருஷ்ணன் என்றே நினைத்து க்ருஷ்ணனிடம் காட்டும் ப்ரேமையை இவனிடம் வெளிப்படுத்தி, பிறகு வெட்கி தலைகுனிந்தனர் என்கிறது பாகவதம். மன்மதனுக்கும் மேலான மன்மதன் என்பதால் "ஸாக்ஷாந்மந்மதமந்மத:" என்கிறது பாகவதம். ஆண்டாள் **"காமதேவா"** என்று அர்ச்சித்ததும், " மன்மதனே உன்னை வணங்குகிறேன்" என்று பாடியதும் க்ருஷ்ணனாகிற மன்மதனையே குறித்ததாகும்.

இந்த மன்மத வருஷத்தின் அதிதேவதை **ஹிரண்யகர்ப்பர்.** ஹம்ஸவாகனத்தில் வீற்றிருப்பவர். வீணையைக் கையில் ஏந்தியவர். இந்த வருஷம் **மன்மத** என்று பெயர் பெற்றுள்ளது. ஸாதாரணமாக ஹிரண்ய கர்ப்பன் என்பது ப்ரஹ்மாவுக்கும் பெயரான போது விஷ்ணுவுக்கும் பெயராகும். ப்ரளயம் முடிந்து ஸ்ருஷ்டிக்குமுன் ஹிரண்மயமான-பொன்மயமான-தன் நாபியில் ஹிரண்மயமான தாமரைப்பூவில் தோன்றிய ஹிரண்மயமான முட்டையிலிருந்து பொன்மயமாக அவதரித்தவர் ப்ரஹ்மா. இவரைத்தன் கர்ப்பத்தில் தரித்து அவதரிக்க வைத்தவர் ஹிரண்யகர்ப்பராகிய பகவான். எனவே அவரே முதல் ஹிரண்யகர்ப்பர்.

ப்ரஹ்மா மூலமாக உலகை ஸ்ருஷ்டித்தார் விஷ்ணுவான பூகர்ப்பர். இந்த **ஹிரண்ய கர்ப்பர், பூகர்ப்பர்** என்கிற இரண்டு திருநாமங்களும் ஸஹஸ்ரநாமத்தில் இடம் பெறுகின்றன. **ஹிரண்யகர்ப்பஸூக்தம்** யஜுர் வேதத்தில் ப்ரஸித்தம். மன்மதப் பெருமானின் அருளால் இந்த வருஷம் அனைவருக்கும் சுகம் பெருகட்டும்.

சுபமஸ்து

# ஆசார்ய பரம்பரை

வேதவேதாந்த வித்வான் தத்வாம்ருத வர்ஷீ
ஸ்ரீ உ.வே. புலிக்குன்றம் வங்கீபுரம் ஸ்தலசயனாசார்யர்

ஆசார்யன் எனும் குரு சாஸ்த்ரங்களை சிஷ்யனுக்கு உபதேசித்து, தானும் அவ்வழி நடந்துகாட்டுபவன் என்று பொருள். நம் ஸம்ப்ரதாயத்தில் ஆசார்யனுக்கு முக்கிய இடம் உள்ளது. மாத்ருதேவா பவ, பித்ருதேவா பவ, ஆசார்ய தேவா பவ என்று மாதாபிதாக்களைக் காட்டிலும் அடுத்த உயர்ந்த இடத்தில் ஆசார்யனுக்கு இடம் அளித்து வேதம் உபதேசித்தது. ஸ்ம்ருதிகளும் ஆசார்யனை பகவான் போலவே நினைத்து ஒழுக வேண்டும் என்கிறது. ஆசார்ய பரம்பரை வரிசையையும், ஒருவன் தொழவேண்டியது என்றது வேதம். இது பற்றி 'வம்ச ப்ராஹ்மணம்' எனும் ஸாம வேதப்பகுதி விஸ்தாரமாகக் கூறுகிறது. ஸ்வாமி தேசிகனும், "குருப்ய:தத் குருப்யச்ச நமோவாகம் அதீமஹே" என்று தம் ஆசார்யன் தொடக்கமாக ஆரம்பித்து பிராட்டி-பெருமாளாகிற திவ்யதம்பதிவரை ஏறுவரிசையில் குரு பரம்பரையை அநுஸந்திக்கிறார்.

அதே வேதம் 'ஆசார்யாணம் அஸாவஸௌ" என்று ஆசார்ய பரம்பரையை விடாமல் த்யானிக்க விதிக்கிறது. ஆசார்யன் தொடக்கமாக ஆரம்பித்து பகவானை அநுஸந்திப்பது ஆரோஹணம் எனும் ஏறுமுறை ஆகும். பகவானிடம் ஆரம்பித்து ஆசார்யன் வரை அநுஸந்திப்பது அவரோஹணம் எனும் இறங்கு வரிசை ஆகும். இதையே "லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுநமத்யமாம்*!*. அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குரு பரம்பராம்*!!* என்ற திவ்ய ப்ரபந்த பொதுத்தனியனில் ஆரம்பத்தில் அநுஸந்திக்கிறோம். யதிராஜ ஸப்ததியில் தேசிகனும் பெருமாளிடம் ஆரம்பித்து பாஷ்யகாரர் வரை-அதாவது காரிய:பதி, பிராட்டி, விஷ்வக்ஸேநர், நம்மாழ்வார், நாதமுனிகள், உய்யக்கொண்டார்(புண்டரீகாக்ஷர்) மணக்கால்நம்பி (ராமமிச்ரர்), ஆளவந்தார், பெரியநம்பி (மஹாபூர்ணர்) வரை தனித்தனியே ச்லோகங்கள் இட்டு பிறகே பல ச்லோகங்களால் ராமாநுஜரை அநுஸந்திக்கிறார். நாமும் தேசிகனையும் தொழுது வரிசை க்ரமமாக ஆசார்ய பரம்பரையை அநுஸந்திக்க வேண்டும்.தேசிகன் தமிழ்ப்பாசுரமாக "என்னுயிர் தந்தருளியவரை சரணம் புக்கி...... எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே" என்று அருளியபடி நாமும் தினமும் ஆசார்ய பரம்பரையை அநுஸந்தித்து உய்வோமாக.

குரு பரம்பராயை நம:

சுபம்

# மன்மத (2015-2016) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## சித்திரை மாதம் : ஏப்ரல் - மே 2015

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14.04.2015 | செவ்வாய் | தஸமி | அவிட்டம் | சித்திரை<br>வருட பிறப்பு<br>விஷு புண்யகாலம்<br>திருமஞ்ஜனம்- வஸ்த்ரம் | மணப்பாக்கம் குஞ்சப்பூா கோமான்<br>(லேட்) ஸ்ரீ M.R. விஜயராகவன் வாரிசுகள்<br>ஒசூர், Ph : 90477 66000 |
| 11 | 24.04.2015 | வெள்ளி | ஷஷ்டி | திருவாதிரை | ஸ்ரீ பாஷ்யகாரர்<br>ஸ்ரீ ராமாநுஜர் ஜெயந்தி<br>(திருமஞ்ஜனம்) | யாகபுரம் ஸ்ரீ R.கோவிந்தராஜ ஐயங்கார்,<br>வேளச்சேரி,<br>சென்னை, Ph : 98402 87029 |
| 17 | 30.04.2015 | வியாழன் | துவாதஸி | உத்ரம் | ஸம்ப்ரோக்ஷண தினம் -<br>திருமஞ்ஜனம் | ஆக்கூர் சேட்லூர் ஸ்ரீதராச்சாரியார்<br>நங்கை நல்லூர், Ph : 99419 30632 |
| 19 | 02.05.2015 | சனி | சதுர்தசி | சித்திரை | ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜெயந்தி | ஸ்ரீ ரவி சேஷாத்ரி பாடி<br>Ph : 94440 28595 |
| 27 | 10.05.2015 | திங்கள் | அஷ்டமி | ஸ்ரவணம் | | மணப்பாக்கம் ஈயுண்ணி<br>M.S.ராஜகோபால ஐயங்கார்<br>Ph : 24994503 |

**வருஷப் பிறப்பு (சித்திரை 14.04.2015) : பார்க்க: பக்கம் 1 மன்மத வருஷம்**

**ஸ்ரீ ராமாநுஜர் (உடையவர்) திருநக்ஷத்ரம் (சித்திரை 11, 24.04.2015) :** ஸ்ரீ ராமானுஜர் ஸ்ரீ ஆளவந்தாருக்குப்பின் தோன்றிய ஆசார்யர். ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை நம் நாட்டில் நிலை நாட்டியதால் இந்த ஸித்தாந்தம். "ராமானுஜ தர்ஸனம்" எனவும் "விசிஷ்டாத்வைதம்" எனவும் பெயர் பெற்று விளங்குகிறது. இவர் காலத்திலிருந்து விஷ்ணுவே முழுமுதற்கடவுள் என்கிற கருத்து பல இடங்களில் பரவி, மத்வாசார்யர், இராமானந்தர், வல்லபாசார்யர், சைதன்ய மஹாப்ரபு, நிம்பார்கர், ஸ்வாமி நாராயணன் ஆகிய பல ஆசார்யர்கள் தங்கள் தங்கள் ஸித்தந்தங்களை ஸ்தாபித்துள்ளனர். ஸ்ரீ இராமானுஜரின் 1000-வது அவதாரதினம் ஹேவிளம்பி வருஷம் (2017) கொண்டாடப்பட உள்ளது.

**ஸம்ப்ரோக்ஷண தினம் (சித்திரை 17, 30.04.2015) :** கோயிலில் முக்கிய விக்ரஹத்தைப் பிரதிஷ்டை செய்த தினத்தின் ஆண்டு விழாவாக இன்றைய தினம் கொண்டாடப்படுகிறது. பெருமாளும் மற்றும் உள்ள தெய்வங்களும் திருமஞ்ஜனம் கண்டருள்வர். (திருமஞ்ஜனத்தைப்பற்றின விவரங்களை ஆனி மாதக் குறிப்புகளில் காணலாம்.)

# மன்மத (2015-2016) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## வைகாசி மாதம் : மே - ஜூன் 2015

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 3 | 17.05.2015 | ஞாயிறு | சதுர்தஸி | பரணி | வஸந்த உத்ஸவம் | ஸ்ரீ K. கிருஷ்ணசாமி ஐயங்கார், குமாரர் ஸ்ரீ K. குப்புசாமி ஐயங்கார், P.V. களத்துார். Ph:94447 97471 |
| 18 | 01.06.2015 | திங்கள் | சதுர்தஸி | விசாகம் | ஸ்ரீ நம்மாழ்வார் திருநஷத்ரம் | வடக்குபட்டு ஸ்ரீதராச்சார் (கொரட்டூர்) மற்றும் மணப்பாக்கம் ஸவச்சன்னம் M.R.Seshadri-யின் குமாரர் S.Rajan (உள்ளகரம்) |
| 24 | 07.06.2015 | ஞாயிறு | பஞ்சமி | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | ஸ்ரீ பார்த்தசாரதி ஐயங்கார், ஸ்ரீரங்கம். |

**ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜெயந்தி (சித்திரை 19, 02. 05.2015)** பார்க்க பக்கம் 3.

தமது பக்தன் பிரஹலாதன் பகவான் துரும்பிலும் உள்ளான் தூணிலும் உள்ளான் என்று கூறியதை நிரூபிப்பதற்காக, அவனுடைய தந்தை ஹிரண்யகசிபுவின் முஷ்டியினால் தாக்கப்பட்ட தூணிலிருந்து பகவான் சிங்கத்தின் தலையுடனும் மனித உடலுடனும் வெளிப்பட்டுத் தம்மை எதிர்க்க வந்த அரக்கனை மாய்த்தார். இந்த ந்ருஸிமஹ அவதாரம் பகவானின் தசாவதாரங்களில் ஒன்றாகும். இன்றைய தினம் பகலில் உபவாஸம் இருந்து சாயங்கால அந்திவேளையில் தீர்த்தமாடிவிட்டுப் பகவானைப் பெரியோர் வழிபடுவர். பகவானின் அவதார வைபவமும், ஹிரண்ய கசிபுவை அழித்தபின் ப்ரஹ்மா, சிவன், தேவர்கள், பிரஹ்லாதன் முதலியோர் அவரை ஸ்தோத்ரம் செய்த முறைகளையும் ஸ்ரீமத் பாகவதம் 7-வது ஸகந்தம் 8,9 அத்யாயங்களில் காணலாம்.

**வஸந்த உத்ஸவம் (வைகாசி 3, 17.05.2015)**

ஆலயங்களில் ஒவ்வொரு வருஷமும் வைகாசி மாதத்தில் (வஸந்த ருது) நடைபெறும் உத்ஸவம் "வஸந்த உத்ஸவம்". கோடை காலம் முடிந்து வரும் நாட்கள் (வைகாசியில்) **வஸந்த காலம்** எனக் கூறுவர். இம்மாதத்தில்தான் நல்ல வாஸனை மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. சந்தனம் போன்ற வாஸனாதி திரவியங்களையும் நல்ல வாசனை மலர்களையும் திருமேனியில் அணிந்துகொண்டு காட்சி தருகின்றனர் பகவான். இந்த தருணத்தில் எல்லா ஜீவராசிகளுக்கும், மனம் குளிர்ந்து அவரவர்களின் வேண்டுதல்களுக்கு ஏற்றபடி கருணையுடன் அருளை வழங்குகின்றார் என்று போற்றப்படுகின்றது. ஆகையால் எல்லோரும் இந்த உத்ஸவத்தில் பகவானைப் போற்றி வணங்கினால் எக்காரியமும் ஈடேறும் என்பது திண்ணமே.

**ஸ்ரீ நம்மாழ்வார் திருநஷத்ரம் (வைகாசி 18, 01.06.2015)**

அழ்வார்கள் அனைவரும் ஸ்ரீ வைகுண்டத்திலேயே வாழும் நித்ய ஸூரிகளின் அவதாரங்கள் என்கிறார் ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன். நம்மாழ்வார் விஷ்வக்ஸேனரின் அவதாரம். இவரைச் சடகோபர் என்றும் கூறுவர். இவர் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்கள் **திருவாய்மொழி** (1102 பாசுரங்கள்), **திருவிருத்தம்** (100), **திருவாசிரியம்** (7), **பெரிய திருவந்தாதி** (87) எனப்படும். இவை நான்கும் நான்கு வேதங்களுக்கு ஸமானமாகும். பகவானிடம் சரணாகதி செய்து மோஷம் பெறலாம் என்கிற கருத்தை வெளியிட்டதனால் இவரைப் "பிரபந்த ஜன கூடஸ்தர்" என்றும் அழைப்பர்.

# மன்மத (2015-2016) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## ஆனி மாதம் : ஜூன் - ஜூலை 2015

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 09 | 24.06.2015 | புதன் | அஷ்டமி | உத்ரம் | ஆனி திருமஞ்ஜனம் | யாகபுரம் ஸ்ரீ R.கோவிந்தராஜ ஐயங்கார், வேளச்சேரி, சென்னை. Ph:98402 87029 |
| 11 | 26.06.2015 | வெள்ளி | நவமி | சித்திரை | சக்கரத்தாழ்வார் திருமஞ்ஜனம் | R.சுந்தர்ராஜ ஐயங்கார் பொழிச்சலூர் PH : |
| 12 | 27.06.2015 | சனி | தஸமி | ஸ்வாதி | ஆனி கருடன் திருமஞ்ஜனம் | மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் (லேட்) ஸ்ரீ ஸ்ரீனிவாஸாச்சாரியார் தௌஹித்ரன் ஸ்ரீ ராஜன், பெருங்களத்தூர் PH : 94440 53431 |
| 19 | 04.07.2015 | சனி | திருதியை | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | மணப்பாக்கம் (திருக்கோஷ்டியூர்) **M.S.ஸ்ரீநிவாஸாச்சாரியார்,** மேற்குமாம்பலம், சென்னை–33. PH : 044-2471283 |
| 27 | 12.07.2015 | ஞாயிறு | ஏகாதஸி | கார்த்திகை | தவனோத்ஸவம் | மணப்பாக்கம் கோமான் ஸ்ரீதராச்சார் (வில்லிவாக்கம்) |

### ஆனித் திருமஞ்ஜனம் (ஆனி 09, 24.06.2015)

ஆகம சாஸ்த்ரங்களின்படி பகவானுக்குத் திருமஞ்ஜனம் (வடமொழியில் ஸ்நபனம்) செய்வது ஒரு விசேஷ உத்ஸவமாகும். குறிப்பிட்ட உலோகங்களினாலோ, புனிதமான மண்ணினாலோ செய்யப்பட்ட கலசங்களில், சுத்த ஜலம், பஞ்சகவ்யம், தேன் முதலியவைகளைக் கொண்டு பகவானுக்கு (மூலவர், உற்சவமூர்த்திகள் இருவருக்கும்) வேத மந்த்ரங்களை உச்சாடனம் செய்து கொண்டு ஆகமங்களில் கூறிய முறைகளில் திருமஞ்ஜனம் செய்வர். ஸாதாரணமாக 108 கலசத் திருமஞ்ஜனங்கள் நடைபெறும். சில விசேஷக் காலங்களில் 1008 கலசத் திருமஞ்ஜனங்களும் செய்யப்படும். இத்திருமஞ்ஜனஞ்களுக்கு உபயம் செய்வோர்களுக்கு ஸகல ஸௌபாக்யங்களும் ஏற்படும் என்று நூல்கள் கூறுகின்றன.

### ஆனி கருடன் (ஆனி, 12, 27-06-2015)

ஸ்ரீ வைகுண்டத்தில் எம்பெருமானுக்கு நித்யகைங்கர்யம் செய்யும் முக்யமான நித்ய ஸூரிகளில் ஒருவர் கருடாழ்வார். அவரை வேதங்களின் ஆத்மா **(வேதாத்மா விஹகே³ம்ஷ்வர:)** என்று தமது சது: ஸ்லோகீ(1)ல் ஸ்ரீ ஆளவந்தார் கூறுகிறார். பகவானுக்கு வாஹனமாகவும், த்வஜம் (கொடி) ஆகவும் கைங்கர்யம் செய்யும் இவர். பகவான் ஸ்ரீ ராமாவதாரம் எடுத்து லங்கையில் யுத்தத்தின் பொழுது இந்த்ரஜித்தினுடைய நாகபாசத்தால் கட்டுண்டு கிடக்கையில், கருடாழ்வார் தோன்றி இராமலக்ஷ்மணர்களை நாகங்களின் பிடிப்பிலிருந்து விடுவித்தார். கோயில்களில் கொண்டாடப்படும் உத்ஸவங்களில் கருடஸேவை மிகவும் முக்கியமானது. கஜேந்திரனைக் காப்பாற்ற, கருடன் மேலேறி பறந்தோடி வந்ததுபோல் பகவான் நம்மையும் காப்பாற்றுவார் என்பதைத் தோற்றுவிக்கிறது. ஸ்ரீமந்நாராயணனே பரதத்வம் என்பதை அரச ஸபையில் ஸ்தாபித்த ஸ்ரீ பெரியாழ்வாரை யானை மேலேற்றி வீதி ஊர்வலமாக அழைத்து வரும்பொழுது, பகவான் கருடாரூடனாய் ஆகாயத்தில் தோன்றி ஆழ்வாரை அனுக்ரஹித்தார். அப்பொழுதுதான் பெரியாழ்வார் திருப்பல்லாண்டுப் பாடினார் என்று வரலாறு.

# மன்மத (2015-2016) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## ஆடி மாதம் : ஜூலை - ஆகஸ்டு 2015

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 17.07.2015 | வெள்ளி | த்விதியை | பூசம் | ஆடிப்பண்டிகை திருமஞ்ஜனம் | குஞ்சப்பூர் கோமான் ஸ்ரீ சம்பத் குமாராச்சாரியார் மணப்பாக்கம் PH : 98655 64311 |
| 15 | 31.07.2015 | வெள்ளி | பௌர்ணமி | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | |
| 31 | 16.08.2015 | ஞாயிறு | த்விதியை | பூரம் | திருவாடிப்பூரம் ஸ்ரீ ஆண்டாள் திருநக்ஷத்ரம், திருமஞ்ஜனம் | ஸ்ரீமதி S.வைஜெயந்தி மணப்பாக்கம் PH : 97508 09667 |

**ஆடிப் பண்டிகை (ஆடி 1, 17.07.2015)**

இன்றைய தினம் சூர்ய பகவான் கடக ராசியில் பிரவேசிக்கிறார். தக்ஷிணாயன புண்யகாலம் ஆரம்பமாகிறது.

**திருவாடிப்பூரம் (ஆடி 31, 16.08.2015)**

பூமிப்பிராட்டியின் அம்சமாக அவதரித்த ஆண்டாளைப் பெரியாழ்வார் தமது தோட்டத்தில் கண்டெடுத்த தினம். இக்காரணத்தினால் இவளுக்கு "கோ³தா³" என்கிற திருநாமம் ஏற்பட்டது. ஆழ்வார்களுள் ஒரே பெண்மணி. "மானிடவர்க்கென்று பேச்சுபடில் வாழகில்லேன்" என்று கூறி எம்பெருமானையே தனது கணவனாக வரித்து ஸ்ரீரங்கநாதனுடன் ஐக்யமான ஆண்டாள் திருப்பாவை (30 பாசுரங்கள்) மற்றும் நாச்சியார் திருமொழி (143 பாசுரங்கள்) அருளியுள்ளார்.இவரைத் துதித்து ஸ்வாமி தேசிகன் "கோதாஸ்துதி" என்றும் ஒரு ஸ்தோத்ரத்தை அருளியுள்ளார். ஆண்டாளை வழிபடுவோர்க்கு இனிமையான பேச்சும், வாக்குவன்மையும், பகவானிடம் பக்தியும் பெருகும் என்பது அனுபவ ஸித்தம்.

# மன்மத (2015-2016) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## ஆவணி மாதம் : ஆகஸ்டு - செப்டம்பர் 2015

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 11 | 28.08.2015 | வெள்ளி | சதுர்தசி | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | உபயம் : மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் ரங்கஸ்வாமி ஐயங்கார் |
| 19 | 05.09.2015 | சனி | அஷ்டமி | ரோகிணி | பாஞ்சராத்ர ஸ்ரீ ஜயந்தி | மணப்பாக்கம் ஈயுண்ணி<br>ஸ்ரீ V.ராகவன் ஐயங்கார்<br>மேற்கு மாம்பலம்,சென்னை<br>Ph : 94444 20999 |
| 27 | 13.09.2015 | ஞாயிறு | பிரதமை | பூரம் | கல்யாண உற்சவம் | குஞ்சப்பூர் கோமான்N.ரவி (எ)<br>கோதண்டராமன் & Bros.<br>Ph:94440 33803 |
| 28<br>to<br>31 | 14.09.2015<br>to<br>17.09.2015 | திங்கள்<br>to<br>வியாழன் | பிரதமை<br>to<br>சதுர்த்தி | உத்ரம்<br>to<br>ஸ்வாதி | பவித்ரோத்ஸவம் | கிராமவாசிகள்<br>ஸேவார்த்திகள் |

**பாஞ்சராத்ர ஸ்ரீஜயந்தி (ஆவணி 19, 05.09.2015)**

பகவான் கிருஷ்ணாவதாரத்தில் உலகத்தில் உள்ள எல்லா மனிதர்களுக்கும் ஜ்ஞானம் பெறுவதற்கும் மோக்ஷம் செல்வதற்கும் வழியைக் காண்பித்தார். கீதை என்கிற உபதேசத்தை அர்ஜுனன் மூலம் உலகுக்கு அளித்தார். இது அவர் ஸாஸ்வதமாக செய்த உபகாரம். இவ்வதாரத்தைக் கொண்டாடுவது ஒவ்வொருவரின் கடமையாகும். ஸ்ரீஜயந்திக்கு மறுநாள் பகவான் கிருஷ்ணன் குழந்தைப் பருவத்தில் பிருந்தாவனத்தில் கோபிகைகள் வீடுகளுக்குச் சென்று தயிரும் வெண்ணையையும் களவு செய்து உண்டதைக் கொண்டாடும் வண்ணம் "உறியடி" விளையாட்டு நடத்துவது மரபு.

# மன்மத (2015-2016) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## புரட்டாசி மாதம் : ஸெப்டம்பர் - அக்டோபர் 2015

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 07 | 24.9.2015 | வியாழன் | ஏகாதசி | ஸ்ரவணம் | தேசிகர் சாற்றுமுறை | மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் (லேட்) தேசிகாசாரியார் வாரிசுகள் Ph: 98414 81241 |
| 25 | 12.10.2015 | திங்கள் | மஹாளய அமாவாசை | ஹஸ்தம் | நவராத்திரி உத்ஸவம் | கிராமவாசிகள் மற்றும் ஸேவார்த்திகள் |
| 26 | 13.10.2015 | செவ்வாய் | பிரதமை | சித்திரை | நவராத்திரி உத்ஸவம் ஆரம்பம் | |

**ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் திருநக்ஷத்ரம் (புரட்டாசி 07, 24.09.2015)**

ஸ்ரீ ராமாநுஜருக்கு 120 வருஷங்களுக்குப்பின் தோன்றிய ஸ்ரீ வேதாந்ததேசிகன் ஓர் ஒப்பற்ற ஆசார்யர். அவர் காலத்திலேயே அவரைத் திருவேங்கடமுடையான் அவதாரம் என்றோ, திருமலைக்கோயில் மணி என்றோ, ஸ்ரீ ராமாநுஜரின் மறு அவதாரம் என்றோ கொண்டாடினார்கள். ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை நன்றாக ஸதாபனம் செய்வதற்காகப் பல நூல்களை இயற்றியும், பல இடங்களில் பல முறைகள் காலக்ஷேபங்கள் செய்தும் தமது வாழ் நாட்கள் முழுவதையும் அர்ப்பணித்தார். ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தில் காணப்படும் கருத்து வேறுபாடுகளுக்குச் சரியான முறையில் விளக்கம் அளித்து ஸமூஹத்தில் ஒற்றுமை நிலவ மிகவும் பாடுபட்டார். அவருடைய அவதார தினத்தைக் கொண்டாடுவது ஒவ்வொரு ஸ்ரீ வைஷ்ணவருடைய கடமையாகும்.

**நவராத்திரி உத்ஸவம், புரட்டாசி, 25 & 26 (12.10.2015 & 13.10.2015)**

முக்கியமாக இந்த உத்ஸவம் தாயாராகிய ஸ்ரீ லக்ஷ்மி பிராட்டியின் உகப்புக்காகவே கொண்டாடப்படுகிறது. கடைசி நாளன்று பெருமாள் குதிரை வாஹனத்தில் ஏறி வஹ்னி மரத்திற்குச் சென்று அம்பெய்துவர். இதனால் கோயிலைச் சுற்றியுள்ள இடங்களில் வசிக்கும் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் ஏற்பட்ட தீமைகளும் தோஷங்களும் விலகும் என ஐதீஹ்யம்.

# மன்மத (2015-2016) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## ஐப்பசி மாதம் : அக்டோபர் - நவம்பர் 2015

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | 18.10.2015 | ஞாயிறு | பஞ்சமி | கேட்டை | துலா ரவி விஷூ புண்யகாலம் திருமஞ்ஜனம் | மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் சேஷாத்திரி ஐயங்கார் அசோக் நகர் சென்னை. Ph:94442 79304 |
| 04 | 21.10.2015 | புதன் | அஷ்டமி/ நவமி | உத்திரட்டாதி | ஸரஸ்வதி பூஜை, | |
| 05 | 22.10.2015 | வியாழன் | தஸமி | ஸ்ரவணம் | விஜய தசமி | |
| 24 | 10.11.2015 | செவ்வாய் | சதுர்தசி | சித்திரை | தீபாவளிப் பண்டிகை | பொய்கைப்பாக்கம் ஸ்ரீ S.கண்ணன் ஐயங்கார் கீழ்க்கட்டளை, சென்னை Ph:99403 53210 |

**தீபாவளி (ஐப்பசி 24, 10.11.2015)**

நாடு முழுவதும் கொண்டாடப்படும் இந்த உத்ஸவம் நம் நாட்டின் பண்பாட்டினைக் குறிக்கிறது. இருட்டு, அஞ்ஞானம், தீமைகள் முதலியவற்றைப் போக்குவதற்காக இது சந்தோஷத்துடன் கொண்டாடப்படுகிறது.கோயில்களில் தீபாலங்காரங்களும் பெருமாள், தாயார் முதலிய விக்ரஹங்களுக்குப் புதிய வஸ்தரங்கள் ஸமர்ப்பித்து சாற்றப்படுகின்றன.

# மன்மத (2015-2016) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## கார்த்திகை மாதம் : நவம்பர் - டிசம்பர் 2015

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 02 | 18.11.2015 | புதன் | ஸப்தமி | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் D.ரங்கஸ்வாமி ஐயங்கார் (வளசரவாக்கம்) |
| 07 | 23.11.2015 | திங்கள் | துவாதஸி | ரேவதி | கைசிக துவாதஸி | (லேட்) குஞ்சப்பர் கோமான், M.R. நரஸிம்மன் வாரிசுகள் |
| 10 | 26.11.2015 | வியாழன் | சதுர்தசி | ரோகிணி | பாஞ்சராத்ர, வைகானஸ ஸர்வாலய தீபம் | ஸ்ரீ. G.ராமநாதன் (கனரா வங்கி-ஓய்வு) சேலம் Ph : 94430 86299 |
| 29 | 15.12.2015 | செவ்வாய் | சதுர்தசி | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் S.ஸ்ரீராம் பிச்சை Ph : 94442 05290 |

**திருக்கார்த்திகை (கார்த்திகை 10, 26.11.2015)**

ஆகம சாஸ்த்ரங்களில் இந்த உத்ஸவத்தைக் கட்டாயம் கொண்டாட வேண்டும் என்று கூறப்படுகிறது. நித்யோத்ஸவங்களில் ஒன்றாகும்.

ஆழ்வார்கள் அருளிய 4000 திவ்ய பிரபந்த பாசுரங்களில் 247 பாசுரங்கள் ஸ்ரீரங்கப் பெருமாளை பற்றி மங்களாஸாஸனம் செய்யப்பட்டது. மொத்தம் உள்ள 12 ஆழ்வார்களில் 11 ஆழ்வார்கள் ஸ்ரீ ரங்கநாத பெருமாளை பற்றி பாசுரங்கள் இயற்றியுள்ளனர்.

பாசுரங்கள் : பெரியாழ்வார் 35, ஆண்டாள் 10, குலசேகர ஆழ்வார் 31, திருமழிசை ஆழ்வார் 14, தொண்டரடிப்பொடி ஆழ்வார் 55, திருப்பாணாழ்வார் 10, திருமங்கையாழ்வார் 73, பொய்கையாழ்வார் 1, பூதத்தாழ்வார் 4, பேயாழ்வார் 2, நம்மாழ்வார் 12, மொத்தம் 247 பாசுரங்கள்.

# மன்மத (2015-2016) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## மார்கழி மாதம் : டிசம்பர் 2015 - ஜனவரி 2016

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 1 *to* 29 | 17.12.2015 to 14.01.2016 | வியாழன் | ஷஷ்டி | சதயம் | தனுர் மாத பூஜாக்ரமம் | மார்கழி மாதம் 30 நாள் மணப்பாக்கம் ஈயுண்ணி சந்தானம் ஐயங்கார் மற்றும் மணப்பாக்கம் கிராமமக்கள், சேவார்த்திகள் |
| 05 | 21.12.2015 | திங்கள் | ஏகாதசி | அஸ்வினி | வைகுண்ட ஏகாதசி | மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் ஸ்ரீ M.R. வரதாச்சாரியார் Ph:98842 43336 |
| 06 | 22.12.2015 | செவ்வாய் | துவாதசி | பரணி | துவாதசி பாரணை | மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் S.ரமேஷ், குரோம்பேட்டை, Ph:93810 52964 |
| 27 | 12.01.2016 | செவ்வாய் | த்ருதியை | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | |
| 29 | 14.01.2016 | வியாழன் | பஞ்சமி | சதயம் | போகிப்பண்டிகை | மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் ஸ்ரீ (லேட்)M.R.நரஸிம்மன் வாரிசுகள் Ph:94440 33803 |

**தனுர் மாத ஆராதனை ஆரம்பம் (மார்கழி 1-29, 17.12.2015-14.01.2016)**

ஸ்ரீ ஆண்டாளின் திருப்பாவையை இன்றைய தினத்திலிருந்து ஸேவிக்க ஆரம்பிக்க வேண்டும். ஸூர்யோதயத்திற்குமுன் எழுந்து நீராடிவிட்டு பகவானை வழிபடுவதால் நாடும் நகரமும் செழிக்கும் என்றும், மழை பெய்யும், பசுக்களும் தானியங்களும் விருத்தியாகும் என்றும் ஆண்டாளே கூறியுள்ளார்.

**வைகுண்ட ஏகாதசி (மார்கழி 05, 21.12.2015 & துவாதசி மார்கழி 06, 22.12.2015)**

இந்த தினத்தை **பீஷ்ம ஏகாதசி** என்றும் கூறுவர். மஹாபாரத யுத்தத்தில் தோல்வியுற்று அம்புப் படுக்கையில் படுத்திருந்த பீஷ்மர் எதிரில் நின்றிருந்த பகவான் கிருஷ்ணனைப் பார்த்துக்கொண்டே உயிர் நீத்ததினால் மிகவும் புண்ணியம் வாய்ந்த தினம். ஒவ்வொரு கோயிலிலும் கொண்டாடப்படும் இந்நாளில் ஒரு தனி வாசலை **"ஸ்வர்க்க வாசல்"** என்று திறந்துவைத்து அதன் வழியாக பக்த கோடிகள் பகவானை தரிசனம் செய்வது வழக்கம். முழு உபவாசம் இருப்பது ஸ்லாக்யம்.

**போகிப் பண்டிகை (மார்கழி 29,14.01.2016)**

தனுர் மாத ஆராதனையின் கடைசி நாள். தக்ஷிணாயத்தின் கடைசி நாள் கூட இன்று ஸ்ரீ அண்டாளின் திருக்கல்யாணம் நடைபெறும். பெரியாழ்வார் கனவில் தோன்றின ஸ்ரீ ரங்கநாதப் பெருமாளின் உத்திரவின் பேரில் ஸர்வாலங்கார பூஷிதையான ஆண்டாளைத் திருப்பல்லாக்கில் ஸ்ரீரங்கம் எடுத்துச் சென்று ஆண்டாள் ரங்கநாதருடன் ஒன்றிவிட்ட தினம்.

# மன்மத (2015-2016) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## தை மாதம் : ஜனவரி - பிப்ரவரி 2016

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 15.01.2016 | வெள்ளி | ஷஷ்டி | உத்திரட்டாதி | உத்தராயண புண்ய காலம் பொங்கல் பண்டிகை மகர ஸங்கராந்தி | மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் (லேட்) ஸ்ரீ M.R.நரஸிம்மன் வாரிசுகள் Ph:97501 42913 |
| 12 | 26.01.2016 | செவ்வாய் | த்விதியை | மகம் | ஸுதர்ஸன ஹோமம் | |
| 15 | 29.01.2016 | வெள்ளி | பஞ்சமி | ஹஸ்தம் | ஸ்ரீ கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம் | |
| 25 | 08.02.2016 | திங்கள் | அமாவாஸை | ஸ்ரவணம். | திருமஞ்ஜனம் | |

**உத்தராயண புண்யகாலம், பொங்கல் பண்டிகை (தை 1, 15.01.2016)**
இந்த உத்ஸவத்தை நைமித்திகோத்ஸவம் என்று கூறுவர். இன்றைய தினம் ஸூர்ய பகவான் மகர ராசியில் பிரவேசிக்கிறார். உத்ராயண புண்யகாலம் ஆரம்பிக்கிறது.

**ஸ்ரீ கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம் (தை 15, 29.01.2016) :** ஸ்ரீ கூரத்தாழ்வான் என்று அழைக்கப்படும் இவ்வாச்சார்யான் ஸ்ரீ ராமாநுஜருடைய முதல் சிஷ்யர்களில் ஒருவராவர். ஸ்ரீ ராமாநுஜருடைய வலது கை போன்றவர். காஞ்சீபுரத்திற்கு அருகில் உள்ள கூரம் என்கிற கிராமத்தில் ஸௌம்ய வருஷம் (1010) தை மாதம் ஹஸ்த நக்ஷத்ரத்தில் தோன்றினார். பிரம்மஸூத்ரத்திற்கு ஸ்ரீ ராமாநுஜர் **'ஸ்ரீபாஷ்யம்'** என்கிற உறை எழுதுவதற்கு ஸ்ரீ கூரத்தாழ்வான் மிகவும் உதவியுள்ளார். இவரும் பல நூல்கள் இயற்றி உள்ளார், குறிப்பாக, பஞ்சஸ்தவம், யமகூநத்ராகரம், ஆபசமன ஸாரம் முதலியன. இவருடைய குமாரராகிய ஸ்ரீ பராசார பட்டரும் மிகவும் புகழுடன் விளங்கியவர்.

# மன்மத (2015-2016) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## மாசி மாதம் : பிப்ரவரி - மார்ச் 2016

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 10 | 22.02.2016 | திங்கள் | பௌர்ணமி | மகம் | மாசி மகம் | மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் ஸ்ரீ M.K.நரஸிம்மன் கோடம்பாக்கம். Ph:044-24837774 |
| 16 | 28.02.2016 | ஞாயிறு | ஷஷ்டி | ஸ்வாதி | அன்னக்கூடை உத்ஸவம் | மணப்பாக்கம் ஈயுண்ணி (லேட்) ஸ்ரீ சேஷாச்சாரியார் வாரிசுகள் Ph:044-24994503 |
| 23 | 06.03.2016 | ஞாயிறு | துவாதஸி | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் & லக்ஷார்ச்சனை | புஷ்ப கைங்கர்யம்:1. காஞ்சிபுரம் முகாமி ஸ்ரீ ஜெகன்னாதன், குரோம்பேட்டை. Ph:96001 67698<br>2. மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் (லேட்) ஸ்ரீ M.R.விஜயராகவன் வாரிசுகள், ஒசூர். Ph:90477 66000<br>ததியாராதனை: மணப்பாக்கம் குஞ்சப்பூர் கோமான் ஸ்ரீ ராம பிச்சை, பொழிச்சலூர். Ph:94442 05290 |

**மாசி மகம் (மாசி, 10, 22.02.2016)**

**அன்னக்கூடை உத்ஸவம் (மாசி 16, 28.02.2016)**

திருக்கோயில்களில் பூஜா க்ரமங்கள். மற்றும் நைவேத்யம் போன்றவற்றில் சில பல குறைபாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளன. இக்குறைபாடுகளை ஓரளவு நிவர்த்தி செய்ய, ஷமாபணமாக, ஆகம விதிகளின் கோட்பாட்டிற்கு இணங்க, கோயில் ஆகம சாஸ்த்ரங்கள், வேத விற்பன்னர்களால் ஸ்நபன திருமஞ்ஜனத்துடன் திருப்பாவாடை அன்னக்கூடை உத்ஸவம் செய்தால் வறட்சி. பஞ்சம் முதலிய இன்னல்கள் தவிர்க்கப்படும்.

**ஏக தின லக்ஷார்ச்சனை (மாசி 23, 06.03.2016)**

ஸ்ரீமந் நாராயணனின் நாமத்தை ஜபிப்பவர்களுக்கு நன்மை பயப்பது நிச்சயம். அதிலும் ஒரு லக்ஷம் முறை பரம்பொருளின் நாமத்தை ஜபித்து பலவித புஷ்பங்களால் அர்ச்சனை செய்தால், அலங்கார ப்ரியரான மஹாவிஷ்ணு தாம் மனங்குளிர்வதோடு, தம்மை நாடி வந்தவரையும் மகிழ வைப்பர்.

# மன்மத (2015-2016) வருடத்திய (நடத்த உத்தேசித்துள்ள) உத்ஸவங்கள்

## பங்குனி மாதம் : மார்ச் - ஏப்ரல் 2016

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | நக்ஷத்ரம் | உத்ஸவ விவரம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| 10 | 23.03.2016 | புதன் | பௌர்ணமி | உத்ரம் | பங்குனி உத்ரம் தாயார்-பெருமாள், திருக்கல்யாணம் | மணப்பாக்கம் ஸ்வச்ன்னம் ஸ்ரீ ஸ்ரீனிவாஸாச்சாரியார் பெருங்களத்துார். Ph:95512 59214 |
| 15 | 28.03.2016 | திங்கள் | பஞ்சமி | அனுஷம் | ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி திருநக்ஷத்ரம் | மணப்பாக்கம் (திருக்கோஷ்டியூர்) ஸ்ரீ M.S. ஸ்ரீனிவாஸாச்சாரியார், மேற்கு மாம்பலம், சென்னை. Ph:044-2471 8243 |
| 21 | 03.04.2016 | ஞாயிறு | ஏகாதசி | ஸ்ரவணம் | திருமஞ்ஜனம் | தையார் விஞ்சிமூர் |
| 26 | 08.04.2016 | வெள்ளி | பிரதமை | அஸ்வினி | யுகாதிப் பண்டிகை தெலுங்கு வருஷப் பிறப்பு | லேட் V.R. சந்தானம் வாரிசுகள், செங்கல்பட்டு Ph:044-2742 0486 |

**ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி திருநக்ஷத்ரம் (பங்குனி 15, 28.03.2016)**

பிற்காலத்தில் கோழியாலம் ஸ்வாமி என்று மிகப்ரஸித்தியாய் விளங்கிய ஸ்வாமி அவதரித்த திருநாள் இன்றாகும். அவருடைய தோற்றம் விஷூ வருஷம் பங்குனி அனுஷம் (1881). ஸ்ரீ உ.வே. வேங்கட வரதாச்சாரியார் என்கிற மஹானுக்கும் லக்ஷ்மி என்கிற தேவிகளுக்கும் திருக்குமாரராய், **செங்கல்பட்டு அருகாமையிலுள்ள மணப்பாக்கத்தில், நம் கிராமத்தில்** அவதரித்தவர். இவர் சிறு வயதிலிருந்தே மஹா விரக்தராயிருந்து தமது 39-வது வயதில் ஸந்யாஸம் பெற்றார். இவருடைய திருவடிகளை ஆச்ரயித்தவர்கள் (சிஷ்யர்கள்) பல வித்வான்களும், லௌகீக அதிகாரிகளும் ஆவார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் ஸ்ரீ உ.வே. அபிநவதேசிக உத்தமூர் வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உ.வே. கூத்தப்பாக்கம் நீலமேகாசார்ய ஸ்வாமி, மஹோபாத்யாய R.V. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உ.வே.M.அனந்தசயனம் அய்யங்கார், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ஸ்ரீ உ.வே.K.S.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எனப் பலர் இருந்தனர். இவ்வாச்சார்யரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்ததைச் சிறப்பாகக் கொண்டாடும் பாக்யம் பெற்றவர்கள் அனைவரும் அவர்களுடைய குடும்பங்களும் ஸகல ஸௌபாக்யங்களைப் பெற்று விளங்குவர்.

॥श्री॥

# ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் சிறப்பு

ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா!
ஒத்தாயெப் பொருட்கும் உயிராய் என்னைப் பெற்ற
அத்தாயாய், தந்தையாய் அறியாதன அறிவித்த
அத்தா! நீ செய்தன அடியேனறியேனே.

ஸ்ர்வேஸ்வரன் ஸகல கல்யாண குண ஸம்பூர்ணன். தனக்கு ஸமமோ மேம்பட்டவனோ இல்லாத பெருமான், லீலார்த்தமாக உலகைப் படைத்தான். படைத்த ஜீவர்களுக்கு வேண்டிய ஸகல பொருட்களையும் படைத்தான். நேர்மையாக நெறி புகட்டும் வேத நூலை அளித்தான். அதன் பொருள் விளங்க உபப்ரும்ஹணங்களான இதிஹாஸ புராணங்களைத் தன்னருள் பெற்ற ஆசிரியர்கள் மூலம் இயற்றியளித்தான். வேதாங்கங்களாக ஸிக்ஷை, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்று 6 அங்கங்களையும் படைப்பித்தான். இவ்வளவும் தான் படைத்த மனித குலம் வாழ்வதற்காகவே செய்வித்தான். மந்-சிந்திப்பது என்கிற தாதுவிலிருந்து மனிதன் என வந்தது. அதாவது நன்கு சிந்தித்துச் செயல் புரிபவன் எனப் பொருள். ஆனால் காமம் - க்ரோதம் - மோஹம் - மதம் - மாத்ஸர்யம் முதலிய கெட்ட குணங்களின் கூட்டங்களால் கவரப்பட்டு மதி இழந்து பாபங்களில் ஈடுபடுகிறான். பாப கர்மங்களின் காரணமாகவே வ்யாதி, தரித்ரம், ஸத்ரு பயம் முதலிய கஷ்டங்களில் சிக்கித் தவிக்கிறான். அதற்காகவே கர்ம விபாக ப்ராஸ்சித்தம் என்றும், ஸம்ருதிகளிலும் பாபங்களிற்கு ப்ராயஸ்சித்தம் என்றும் விதிக்கப்பட்டுள்ளது. அவைகளில் மிகவும் சிறந்த மருந்து போன்றது பகவந் நாம ஸ்மரணம்.

1. **மஹத்யாபதி$_3$ ஸம்ப்ராப்தே ஸ்மர்தவ்யோ ப$_4$க$_3$வான் ஹரி:-**
2. க்ருத யுகத்தில் த்யாநம் செய்தும், த்ரேதாயுகத்ததில் யாகம் செய்தும், த்வாபர யுகத்தில் பூஜித்தும் எந்தப் பலனை அடைகிறானோ அந்த பலனைக் கலியுகத்தில் பகவந் நாம ஸங்கீர்த்தநத்தினால் மனிதன் அடைகிறான் என்கிறது **விஷ்ணு புராணம்.**

## ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தின் சிறப்பு

**கலௌ விஷ்ணு ஸஹஸ்ரநாமம்** என்கிறது ஸத்யநாடி. பகவந்நாம ஸ்மரணம் உயர்ந்தது என்பதை ஸ்ரீ வ்யாஸ பகவான் பாரதத்திலே மோக்ஷ தர்மத்தில் ஸஹஸ்ரநாமத்தை எழுதியதிலிருந்தே அறியலாம். மஹாபாரதம் ஐந்தாவது வேதம் என்பர்.

ஸஹஸ்ரநாமம் ருஷிகளாலும் சொல்லப்பட்டது என்பதை **ருஷிபி: பரீகீர்த்திதா** என்கிறார். அதாவது ஸநக ஸநந்தநர் நாரதர் முதலியவர்களால் சொல்லப்பட்டது என்றபடி. அவர்கள் சொன்னவைகளை எல்லாம் வண்டுகள் பல இடங்களில் தேனைச் சேகரிப்பது போலத் தொகுத்து நமக்குக் கொடுத்தவர் **வ்யாஸ பகவான்.** ஆகையால் நாம் மிகவும் சிறப்பாகச் சொல்லத் தகுந்த நாமாக்கள்.

இந்த ஸஹஸ்ரநாம பாராயணம் நம் பெரியோர்களும் பலவிதமான பிஸாச தோஷம் - ஜன்னி - ஜ்வரம் - தாங்க முடியாத தாரித்ர்யம் இவைகளைப் போக்கடிக்கச் செய்து வந்துள்ளார்கள்.

மழைக்காக **மாருதமஸி** என்கிற வேத மந்த்ர பாராயணத்துடன் 40 நாட்கள் ஸஹஸ்ரநாமமும் சொல்வதால் மழைபெய்து ஏரி குளங்கள் நிரம்பியுள்ளன. காவ்யத்திலும் இந்தப் பாராயணம் ஸகல ஜீவன்களின் ரக்ஷகம் என்கின்றனர். பட்டபாணர் ப்ரஸவ க்ருஹவர்ணத்தில் இடைவிடாது படிக்கப்பட்ட நாராயண நாமஸஹஸ்ரம் என்கிறார்.

உலகத்திலும் ஸஹஸ்ரநாம பாராயணம் விஷ - பிஸாச - வ்யாதி - க்ரஹபீடை - துர்ஸ்வப்நம் - கெட்ட நிலை - இவைகள் நீங்குவதற்காக - மஹா பாதகங்கள் நீக்குவதற்காக - இம்மை மறுமை நன்மைக்காக - பரமபத ப்ராப்திக்காகவும் பகவத் குணங்களாகிய அம்ருத பாநத்திற்காகவும் எல்லையற்ற ஸ்ரத்தா பக்தி விஸ்வாஸத்துடன் கையாளப்படுகிறது. ஆகையால் ஸஹஸ்ரநாம பாராயணம் மிகவும் உயர்ந்தது. **ஸங்கரர், பட்டர், மத்வாசார்யர்** முதலிய மூன்று ஸமயாசார்யர்களும் இதற்கு பாஷ்யமியற்றி உள்ளனர். பல ஸஹஸ்ரநாமங்கள் இருந்தும் ஸஹஸ்ரநாமம் என்றால் **விஷ்ணு ஸஹஸ்ரநாமம்** தான் அறியப்படுகிறது. ஆகையால் **ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமப்** பெருமை அளவிட முடியாதது ஆகும்.

**நாராயணபாததூளி**

**(வைகுண்டவாஸி) ஸ்ரீ. உ.வே. கோபால தேசிகாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர், சென்னை -4.**

॥श्री॥

# திருமால் திருநாமம்

ஸ்ரீ.உ.வே. வித்வான் நாவல்பாக்கம் வலயபேட்டை
ராமாசாரியர், செல்: 9444921165
C-17, AGS காலனி, நங்கநல்லூர், சென்னை - 61.

ஸ்ரீமந் நாராயணன் நம்மிடம் கொண்டுள்ள பரிவு இவ்வளவு அவ்வளவு என்று அளவிட முடியாதது. எப்பொழுதெல்லாம் நாம் அவனை எண்ணுகிறோமோ அப்பொழுதெல்லாம் நமக்கு அநுக்ரஹம் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறான். நாம் அவனை எண்ணாவிட்டாலும் அவன் நம்மையே நினைத்துக் கொண்டுள்ளான். ஓங்கி உலகளந்த உத்தமனாகத் திகழ்கின்ற நாராயணன், தாய் தன் குழந்தையை அனைத்துக்கொண்டு தூங்குவது போல் ஏற்றதாழ்வு இல்லாமல் அனைத்து ஜீவராசிகளின் மீதும் தன் இலச்சினையைப் பதிக்கின்றான். அர்ச்சா மூர்த்தியாகத் திருவேங்கடம் முதலிய திவ்ய க்ஷேத்ரங்களில் எழுந்தருளி தன் திருக்கைகளால் திருவடியைக் காணபித்து, "இந்த திருவடியைத் தஞ்சமாகப் புகுந்தவர்களுக்கு ஸம்ஸார ஸாகரம் என்று சொல்லப்படும் பிறவிப் பெருங்கடல் முழங்கால் அளவே ஆகும்" என்று அறுதியிடுகிறார். **அபய முத்ரையைக்** காணபிக்கும் இடங்களிலோ "நீ எதற்கும் பயப்பட வேண்டாம். இந்த திருவடிகளைத் தஞ்சமாகப் புகுந்து வேண்டியவர்களுக்கு அவர்கள் வேண்டியதைக் கொடுப்பதற்கே நான் இருக்கிறேன். எனக்கு நினைவூட்டுதல் தேவை இல்லை" என்று பறை சாற்றுகிறார். ஆச்ரித ஸுலபனான எம்பெருமானின் புகழை நாம் காதால் கேட்க வேண்டும், வாயால் பாட வேண்டும், மனதாலே எண்ண வேண்டும். இதைச் செய்தால் கச்சிதனில் கண்கொடுக்கும் பெருமாளாக எழுந்தருளியுள்ள தேவப்பெருமாள் நம் அகக் கண்களையும் புறக்கண்களையும் திறந்து நாம் கருத (எண்ணின உடனேயே) வரம் கொடுப்பார்.

இப்படி ஆச்ரித ஸுலபனாக உள்ள எம்பெருமானை எப்படிப் புகழ்வது? அதற்கு என்ன தகுதி வேண்டும்? சாஸ்த்ரங்கள் படித்திருக்க வேண்டுமா? உயர்குலத்தில் பிறந்திருக்க வேண்டுமா? எப்பொழுதும் மடியாக (சுத்தமாக) இருக்க வேண்டுமா? ஆண், பெண், சிறுவர் முதியோர் என்று பாகுபாடு உண்டா? என்று எத்தனையோ கேள்விகள் நமக்குள் தோன்றலாம். இவை எல்லாவற்றுக்கும் ஒரே விடை "எம்பெருமானுடைய புகழை, திருநாமத்தைப் பாட வேண்டும் என்கிற எண்ணம் ஒன்றே

அதற்குத் தகுதியாகும். வேறு எதுவும் தேவையில்லை. நல்வகையால் நமோ நாராயணா என்று அநேகம் திருநாமங்களையும் சொல்லி உனக்கு பல்லாண்டு கூறுவன் என்கிற எண்ணம் தான் தேவை என்று ஆழ்வார் அருளிச் செய்கிறார்.

எப்பொழுதும் நாம் ஒரு செயலில் ஈடுபடுகிறோமென்றால் அது ஒரு பயனைக் குறித்துதான் இருக்கும். அப்படி இருக்க எம்பெருமானின் திருநாமத்தைப் போற்றுகிறோம் என்றால் அதன் பலன் என்னவாக இருக்கும் என்ற எண்ணம் நமக்கு உதிக்கிறது. இந்த எண்ணத்தைத் தெளிவிக்கின்றார் குலசேகராழ்வார் ‘‘முகுந்தமாலை’’யில்.

"ஸ்ரீமந்நாம ப்ரோச்ய நாராயணாக்யம்
கே ந ப்ராபு: வாஞ்சிதம் பாபிநோபி||" என்று.

"நாராயணா!"என்கிற திருநாமத்தைச் சொல்லி விட்டு பாபம் பண்ணினவர்களாக இருந்த போதினும் கூட தாங்கள் விரும்பியதை பெறாதவர்கள் எவரேனும் உண்டோ? யாரும் இல்லை என்பது இதன் பொருள். நாராயண சப்தத்தை மட்டும் சொன்னாலே போதும் எல்லா துக்கங்களிலும் விடுபட்டு விடுவார்கள் **"ஸங்கீர்த்ய நாராயண சப்த மாத்ரம் விமுக்த து:கா: ஸுகிநோ பவந்தி"** என்கிறார் மஹர்ஷி.

லக்ஷ்மி இல்லாமல் நாராயணன் இல்லை. நாராயணன் இல்லாமல் லக்ஷ்மீ இல்லை. நாராயண சப்தத்தைச் சொன்ன மாத்ரத்தாலே ஸகல ஐச்வர்யங்களும் கிட்டிவிடும். லக்ஷ்மி இருக்கின்ற இடத்தில் தரித்ரம் கிடையாது. துக்கம் கிடையாது. ஆகையால் இஷ்ட ப்ராப்தி அநிஷ்ட நிவ்ருத்தி என்று சொல்லக்கூடிய புருஷார்த்தம் தானாக, வழி வழியாக நாராயண சப்த மாத்ரத்தை சொல்வதனால் கிட்டி விடும் என்பதில் ஐயமில்லை. இவ்வளவு நாட்கள் நமக்குக் கிடைக்காததற்குக் காரணம் நாம் நாராயண சப்தத்தைச் சொல்வதில் முனையாதது தான்.

எம்பெருமானின் திருநாமத்துக்கு அவ்வளவு ஏற்றம் இருப்பினும் நமது மனதிற்குள் ஒரு பயம் நடமாடுகிறது. "நாம் செய்யக் கூடாதவற்றைச் செய்ய வேண்டியவை என்று நினைத்துச் செய்கின்றோம். ஆனால் செய்ய வேண்டியவற்றையோ செய்யக்கூடாதவை என்று மாறாடி நினைத்து செய்யாமல் இருக்கின்றோம். இப்படி உள்ள நமது பாபத்தையும் போக்கடிக்குமா இந்த திருநாமம்?" என்பதாக. கண்டிப்பாகப் போக்கடிக்கும் என்கிறார் ஸ்வாமி தேஸிகன். ஸ்வாமி தேஸிகன் "ஸரணாகதி தீபிகை"யில்

## திருமால் திருநாமம்

**கர்தவ்யமித்யநுகலம் கலயாம்யக்ருத்யம்**
**ஸ்வாமின்! அக்ருத்யமிதி க்ருத்யமபி த்யஜாமி|**
**அந்யத் வ்யதிக்ரமண ஜாத மநந்தமித்தம்**
**ஸ்தாநே தயா பவது தே மயி ஸார்வபௌமீ ! ||**

என்கிற ஸ்லோகத்தில் தீபப்ரகாஸனின் தயை இந்த மாதிரி இடத்தில் ப்ரவஹித்து நம்மை பரிசுத்தமாக்கிறது என்கிறார்.

நாம் விரும்பி எந்த தவறும் செய்வதில்லை. ஆனால் ஸந்தர்ப்ப சூழ்நிலை, நாம் வாழ்வதற்காகச் சில பாபகார்யங்களைச் செய்யப் பண்ணுகிறது. நமது மனதும் இதனால் கறைபடிந்ததாக ஆகிறது. பாபம் செய்து வந்த த்ரவ்யங்களைக் கொண்டுதான் அனேகமாக ஜீவிக்கின்றோம். முறைப்படி நாம் செய்ய வேண்டிய செயலைச் செய்யாமல் இருக்கிறோம். இப்படிப்பட்டவர்களுக்கு நற்கதி உண்டா என்றால் அவர்களுக்கு ஒரே வழி கோவிந்த நாம கீர்த்தனமேயாகும்.

**கலௌ கல்மஷ சித்தாநாம் பாபத்ரவ்யோபாய ஜீவிநாம் |**
**விதி க்ரியா விஹீநாநாம் கதி: கோவிந்த கீர்த்தநம் ||**

அடுத்து நாம் பக்தி ச்ரத்தையுடன் எவ்வளவோ நல்ல கார்யத்தைச் செய்ய முற்படுகின்றோம். எந்த வைதிக கார்யமாக இருந்தாலும் அதில் மந்த்ரங்களை உச்சரிப்பதிலோ, த்ரவ்யங்களை சேகரிப்பதிலோ, செயல் முறையிலோ ஏதாவது ஒரு ப்ரகாரம் தோஷம் ஏற்பட்டு விடுகின்றது நம்மை அறியாமலேயே. அதற்காகவே ஸர்வ ப்ராயசித்த ஹோமம் என்று சொல்லப்பட்டுள்ளது. அந்த ஹோமம் செய்யும் போதும் குறை வந்தால் என்ன பண்ணுவது? ஸ்வாமி தேஸிகன் "அபீதிஸ்தவ"த்தில்

**"யதி க்வசன நிஷ்க்ருதி: பவதி ஸாऽபி தோஷாவிலா"**

ஏதாவது குறையைப் போக்க ஒரு செயல் செய்தோமானால் அதுவும் தோஷத்துடன் சேர்ந்ததாகவே ஆகிறதே" என்று அருளிச் செய்கிறார். இப்படிப்பட்ட நிலைமை வரும் என்று மஹர்ஷிகளுக்குத் தெரியும். எனவே தான்.

**"மந்த்ரத: தந்த்ரத: சித்ரம் தேசகாலார்ஹ வஸ்துத: |**
**ஸர்வம் கரோதி நிச்சித்ரம் நாம ஸங்கீர்த்தனம் தவ||"**

# திருமால் திருநாமம்

மந்த்ரத்தினாலோ, செயல் முறையினாலோ, அந்தந்த காலத்திற்கும் இடத்திற்கும் உரித்தான வஸ்துக்களாலோ ஏதாவது குறைகள் ஏற்படுமானால் அந்த குறைகள் எல்லாவற்றையும் குறைவொன்று மில்லாததாகச் செய்யக் கூடியது எம்பெருமானுடைய திருநாமம் ஒன்றே ஆகும். ஆகையால் தான் பெரியோர்கள் ஸந்த்யா வந்தனம் உட்பட எந்த நல்ல கார்யங்களைச் செய்தாலும் முடிவில் ஸாத்விக த்யாகம் செய்துவிட்டு "ஸர்வம் ஸ்ரீ க்ருஷ்ணார்பண மஸ்து" என்று சொல்லி விட்டு க்ருஷ்ண, க்ருஷ்ண என்று எம்பெருமானுடைய திருநாமத்தை பத்து முறையாவது உச்சரிப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

நம் மாயவன் பேர் சொல்லி வாழ்ந்தோமானால் தடங்கலாக இருப்பது எல்லாம் போய்விடும். **"கெடும் இடராயவெல்லாம் கேசவா வென்ன"** என்று நம்மாழ்வார் அருளிச் செய்துள்ளார். இதைக் கொண்டுதான் பெரியோர்கள் ப்ரயாணத்தின் போது **"கேசவாய நம:"** சாப்பிடும் போது **"கோவிந்தாய நம:"** உறங்குவதற்கு முன் **"மாதவாய நம:"** தூங்கி எழுந்த உடனும், குளிக்கும் போதும் **"ஹரி: ஹரி:..."** என்றும் சொல்ல வேண்டும் என்று சொல்கிறார்கள்.

இப்படிப்பட்ட பெருமைகளை உடையது திருமாலின் திருநாமம் என்று உணர்ந்து உச்சரிப்பவர்களுக்கு தான் இந்த பலனா? அல்லது அதை அறிந்துக்கொள்ளாமலே சொல்பவர்களுக்குமோ என்றால் இதற்கும் ஸ்வாமி தேஸிகன் ஒரு எடுத்துக்காட்டுடன் விளக்கம் கூறுகின்றார் "ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார"த்தில். ஒருவன் காட்டின் நடுவில் போய்க்கொண்டிருந்தானாம். அவனை ஓநாய், நரி போன்ற துஷ்ட ப்ராணிகள் சூழ்ந்து கொண்டு துன்புறுத்த ஆரம்பித்ததாம். அந்த ஸமயத்தில் குகையிலிருந்த சிங்கம் இயல்பாக கர்ஜித்ததாம். அந்த கர்ஜனையைக் கேட்ட உடன் ஓநாய் முதலிய ம்ருகங்கள் எல்லாம் பயந்து ஓடிவிட்டதாம். அந்த ஸிம்ஹ கர்ஜனை போன்று எம்பெருமானின் திருநாமத்தை நாம் சொல்ல வேண்டும் என்கிற எண்ணம் இல்லாமல் இயல்பாகச் சொன்னோமேயானாலும் நமது பாபங்கள் எல்லாம் ஓடிவிடுகின்றன என்கிறார் தேஸிகன்.

க்ருத யுகத்தில் எம்பெருமானை த்யானம் பண்ணுவதாலும், த்ரேதா யுகத்தில் அநேக யாகங்களினால் எம்பெருமானை ஆராதிப்பதாலும், த்வாபர யுகத்தில் அவனுக்கு கைங்கர்யங்கள் செய்வதாலும் என்ன பலன் வருமோ அந்த பலன் கலியுகத்தில் எம்பெருமானின் திருநாமத்தைச் சொல்வதனாலேயே கிடைத்து விடுகிறது.

# திருமால் திருநாமம்

உலகத்தார் எல்லோரும் இப்படித்தான் எம்பெருமானின் திருநாமத்தைச் சொல்லிக் கொண்டுள்ளார்களா? நாம் மட்டும் சொன்னால் அவர்கள் என்ன நினைப்பார்கள்? என்று நாம் எண்ணக்கூடாது என்கிறார் ஆழ்வார்.

**"கண்ணாளன் கண்ணமங்கை நகராளன் கழல்சூடி அவனை உள்ளத்தெண்ணாத மானிடத்தை எண்ணாத போதெல்லாம் இனியவாறே"** என்று எம்பெருமான் திருநாமத்தை நினைக்காதவர்களைப் பற்றி நாம் நினைக்காமல் இருக்கும் காலம் நல்ல காலம் என்கிறார்.

"கேசவா ! புருடோத்தமா" என்றும் "கேழலாகிய கேடிலீ!" என்றும் எப்பொழுதும் பகவந்நாம ஸ்மரணம் பண்ணுபவர்களின் பெருமை நம்மால் சொல்ல முடியாது என்கிறார் பெரியாழ்வார்.

ஒவ்வொரு தாய் தந்தையரும் தமது பெண் குழந்தையை கந்யகாதானம் செய்து கொடுக்கும் போது தம் பெண்ணை மஹாலக்ஷ்மியாகவும், கன்னிகையை ப்ரதிக்ரஹித்துக் கொள்கிற வரனை மஹாவிஷ்ணுவாகவும், எண்ண வேண்டும் என்று விவாஹ மந்த்ரங்கள் கூறுகின்றன. அங்கும் எம்பெருமானின் திருநாமத்தையே எண்ண வேண்டும்.

நாராயண நாமம் நமது பாபத்தைப் போக்கடிப்பதும் வழிவழியாக மோக்ஷத்தைக் கொடுப்பதும் இருக்கட்டும் இம்மையில் என்ன பலன் நமக்குக் கொடுக்கும் என்பது அடுத்த வினா. எந்தவிதமான பலனையும் உத்தேசிக்காமல் அநந்ய ப்ரயோஜனமாக எம்பெருமானின் திருநாமத்தை ஸ்மரணம் செய்து கீர்த்தனம் செய்தோமானால் இம்மையிலும் அது தாமாகவே எல்லா நற்பலன்களையும் கொடுக்கும் என்பதில் ஸந்தேகமில்லை. இதற்கு வேதத்தில் வகுத்துள்ள ஒரு வழியைப் பார்ப்போமாக. ஒவ்வொரு சுபகார்யங்களிலும் மாமனாருடைய ஆசீர்வாதம் செய்யும் போது சொல்லப்படும் வேத மந்த்ரங்களின் பொருளைப் பார்த்தோமானால் இது நன்கு விளங்கும். **"ஆசாஸ்தேSயம் யஜமாநோSஸௌ"** என்று தொடங்குவது அந்த மந்த்ரம். ஸ்வர்காதி பலன்களை உத்தேசித்து யஜமானன் யாகம் செய்தானேயானாலும் அவனுக்கு நீண்ட ஆயுளையும், நன்மக்களைப் பெறுவதையும், எல்லோராலும் கொண்டாடப்படும் நிலைமையையும், மீண்டும் தர்ம கார்யங்கள் செய்ய எண்ணம் ஏற்படும்படியும், மிகச்சிறந்த ஸ்தானத்தை அடைவதையும், உலகோர் எல்லாம் விரும்பி போற்றும்படி உள்ள நிலையும் பெற வேண்டும் என்று ருத்விக்குகள் ஆசாஸனம் செய்கிறார்கள். அவ்வாறே எம்பெருமானின் திருநாமமும் குலம் தரும், செல்வம் தந்திடும், பெற்ற தாயினும் ஆயின செய்யும், நலம் தரும் என்கிறார் திருமங்கை மன்னன். திருமாலின் திருநாமத்திற்கு நிகர் எது?

# ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமி வைபவம்

ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமி என்று ஜகத் ப்ரஸித்தராய் போற்றப்படும் மஹான் 1882-ம் ஆண்டு மணப்பாக்கம் எனும் ஸ்ரீக்ராமத்தில் ஸ்ரீ வேங்கடவரதாசார்யர் - லக்ஷ்மீ தம்பதியினருக்கு குமாரராக அவதரித்தவர். அவரின் அவதார தினம் பங்குனி அனுஷ நன்னாளாகும். ஸ்வாமிக்கு ஸகாலத்தில் ப்ரஹ்மோபதேசம் செய்விக்கப்பட்டு அத்யயனம் பண்ணுவதற்கும் ஏற்பாடு செய்தனர். அத்யயனம் முடிந்தவுடன் பெருங்கட்டூர் கண்டாவதார தாதாசார்யர் என்பவரிடம் வ்யாகரணம் பயின்றார். மேலும் இளங்காடு ரங்காசாரியார் என்ற ஸ்வாமியிடம் தர்க்க சாஸ்த்ரம் கற்று அதிலும் நிபுணரானார். நம் ஸ்வாமி ஸ்ரீபாஷ்யாகார ஸம்ப்ரதாயத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் ஸ்ரீகேதாண்டிபட்டி ஸ்வாமியின் ஸத்சிஷ்யரான திருப்பதி வேதாந்தராமானுஜ மஹாதேசிகனிடம்- பூர்வாச்ரமத்திலேயே மீமாம்ஸா சாஸ்த்ரமும், உத்தர மீமாம்ஸை என்று வழங்கப்படும் சாரீரக சாங்த்ரத்தையும் அதிகரித்தார். மரத்தாம்பாடி வம்சத்தைச் சேர்ந்த பங்கஜவல்லி என்ற பெண்ணை மணந்தார். வாசித்துக் கொண்டிருக்கும் பொழுதே தன்னுடன் பயிலும் மற்றையோருக்கு ஆசார்யன் அருளிச் செய்த அரிய பல கருத்துக்களை போதிக்கும் ஸாமர்த்யம் பெற்றவர். வேதாந்த சாஸ்த்ரங்களில் பொதிந்துள்ள கருத்துக்களின் தாத்பர்யங்களை ஆராயும் வல்லமை பெற்றவர். ஸம்ப்ரதாய நூல்கள் பல இவர் இயற்றியுள்ளார். உதாரணத்திற்கு சில - உக்திநிஷ்டாபரித்ராணம், ஸ்ரீஜயந்தி நிர்ணயம், பேத ஸாம்ராஜ்யம். இந்த மஹானுக்கு ஒரே குமாரத்தி. அவளுக்கு 5 வயது இருக்கும்பொழுது வைராக்யம் மேலிட்டு ஸந்யாஸாச்ரமம் கைக்கொண்டு ஸந்யாஸம் மேற்கொண்டபோது இவருக்கு 39 வயது. 40 ஸம்வத்ஸரங்கள் சாதுர்மஸ்ய ஸங்கல்பம் செய்த மஹஸீயர். தமது ஆசார்யன் ஸ்ரீ திருப்பதி ஸ்வாமியிடத்தில் இவருக்கு காஷாய ஸ்வீகாரம். நிறைய ஸத் சிஷ்யர்களுக்கு ஸமாச்ரயணம், பரஸமர்பணம் முதலானவைகளை செய்தவர். திருச்சானூரில் பல வித்வான்களுக்கு ஸ்ரீ பாஷ்யம்-ஸ்ரீகீதாபாஷ்யம் முதலான வேதாந்த க்ரந்தங்களை பலமுறை காலக்ஷேபம் ஸாதித்தருளினார். பிறகு பாரதநாடு சுதந்திரம் அடைந்த பொழுது ஸ்ரீ தேவாதிராஜன் ஸேவித்து மகிழ வேண்டும் என்பதற்காக காஞ்சீ மாநகரத்திற்கு எழுந்தருளினார். காஞ்சீபுரத்தில் ஸ்ரீரங்கராஜ வீதியில் அமைந்துள்ள ஸ்ரீகேதாண்டிபட்டி ஆச்ரமத்தில் தங்கி காலக்ஷேபம் ஸாதித்துக் கொண்டிருந்தார். தமது 80-வது திருநக்ஷத்திரத்தின் தொடக்கத்தில் 1961-ம் வருடம் திருநாடு அலங்கரித்தார். ஸ்வாமியின் 120-வது திருநக்ஷத்ரம் 2002ம், வருஷம் ஸ்ரீரங்கத்திலும் மற்றும் பல கிராமங்களிலும் விமரிசையாக கொண்டாடப்பட்டது. ஸ்வாமியின் அர்ச்சாவதார திருமேனியை ஸ்ரீ மணப்பாக்கம் பெருமாள் ஸன்னிதியில் இன்றும் ஸேவித்து மகிழலாம். 133-வது திருநக்ஷத்ர ஸமயத்தில் இந்த வ்யாஸத்தை எழுதுவதில் ஈடுபட வைத்த மஹஸியர்களிடம் க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொண்டு நன்றியுள்ளவனாகிறேன்.

இவண்

**பையாம்பாடி சேட்லூர்**

**ஸ்ரீ ராகவாச்சார்**

ஸ்ரீமதே ரங்கராமானுஜ மஹாதேசிகாய நம:
ஸ்ரீமதே வேதாந்த ராமானுஜமஹாதேசிகாய நம:

# திருப்பாவையில் திவ்யதேச அனுபவங்கள்

திருப்பாவை பாசுரங்களில் திவ்ய தேசங்களை அந்வயித்து அனுபவிப்பதற்கு ஸ்ரீ பாதுகாதேவி துணையுடன் ஆசார்யன் அனுக்ரஹத்தையும் துணைகொண்டு விழைகிறேன்.

அபிநவதேசிக ஸ்ரீ உப வே உத்தமூர்ஸ்வாமி ப்ரபந்த ரக்ஷை எனும் திருப்பாவை வ்யாக்யானத்தின் பக்கம் 54 ல் திருப்பாவை உள் பொருள் எடுத்து உரைக்கும் போது ஒவ்வொரு பதத்திற்கும் ஸமந்வயம் செய்ய வேண்டுமென்பதில்லை. முடிந்த மட்டில் கொள்வது என்று பணித்துள்ளார். அதன்படி 30 பாசுரங்களிலும் திவ்ய தேச அனுபவம் ஏற்படுவது ஆசார்யன் அனுக்ரஹமே. இதில் விஷயம் பொருத்தமாயிருந்தால் மஹான்கள் அனுக்ரஹிக்க வேணும்.

1 ஆம் பாசுரம் **மார்கழித் திங்கள்.** நமக்குப் பறையாகிற முக்தியைத் தரும் **பரமபத நாதனுக்கு.** நாராயணனுக்கு.

2 ஆம் பாசுரம் **வையத்தில்,** பாற்கடலில் பையத் துயிலும் **க்ஷீராப்திநாதன்** மங்களாஸாஸனம்.

3 ஆம் பாசுரம் **ஓங்கி உலகளந்த உத்தமனுக்கு. திருக்கோவலூர் த்ரிவிக்ரமப் பெருமாளுக்கு** மங்களாஸாஸனம். மும்மாரியாகிற மூன்று திருவந்தாதிகளைப் ப்ரவர்த்திப்பித்து தீங்கின்றி நாடெல்லாம் திவ்யதேசங்களை உலகுக்கு காட்ட ஆரம்பித்து வைத்த பெருமாளான ஆயனார் நீங்காத செல்வமான அருளிச்செயலை வள்ளல் பெரும் பசுக்களான ஆழ்வார்கள் அருள முதலில் அருளிய திவ்யதேசம் திருக்கோவலூர்.

4 ஆம் பாசுரம். **ஆழிமழைக்கண்ணா!** கருமேகத்தை விளித்துச் சொன்ன பாசுரம். காளமேகம் என்றால் கருமேகம். **திருமோகூரில் காளமேகப் பெருமாள்.**

5 ஆம் பாசுரம் **மாயனை. வடமதுரை** மைந்தனுக்கு.

6 வது பாசுரம் **புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயில்** - என்கிற பாசுரம் **திருவரங்க திவ்யதேசம்.** புள்ளரையன் கோயில் என்பதால் பெரிய திருவடிக்கு பெரிய ஸந்நிதி உள்ள திவ்யதேசம். கோயில் என்பது திருவரங்கமாயிற்று. முனிவர்களும் யோகிகளும் - மூன்று தொண்டர் ஒன்றினர் என்று திருமழிசைப் பிரான் பேசுவர். எனவே புள்ளும் சிலம்பின காண் பாசுரம் திருவரங்கம் திருப்பதிக்காயிற்று.

## திருப்பாவையில் திவ்யதேச அனுபவங்கள்

7வது பாசுரம் - **கீசு கீசு** என்று **திருமலை** குறிக்கப்பட்டது. பேசின பேச்சரவம் கேட்டிலையோ - **திருவேங்கடமுடையான்** தொண்டமான் சக்ரவர்த்தியுடன் பேசின பேச்சு - கலியன் அருளியது போல், தொண்டை மன்னவன் திண்டிறல் ஒருவற்கு என்று திருமந்த்ர அர்த்தத்தை தொண்டைமான் சக்ரவர்த்திக்கு உபதேசித்த பேச்சு - பேச்சு அரவமாயிற்று. இப்பாசுரம் திருமலை திவ்ய தேசத்துக்காயிற்று.

**8. கீழ்வானம் - காஞ்சீபுரம்:** தேவாதி தேவன் என்று தேவப்பெருமானை குறிப்பதாக பதம் உள்ளது. ஆராய்ந்து அருள்பவன். பேரருளாளன் என்பதாலும் இப்பாசுரம் காஞ்சீபுரம் தேவப்பெருமாள் விஷயமாயிற்று.

**9. தூமணிமாடம் - திருக்குடந்தை:** தூமணிமாடம் - செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை - தூய்மையான மணிகள் சேர்ந்த இடம். சுற்றும் விளக்கெரிய - திருக்குடந்தை திவ்ய தேசத்தை சுற்றி தஞ்சைமா மணிக்கோயில், கூடலூர், கபிஸ்தலம், புள்ளம்பூதங்குடி, ஆதனூர், திருவெள்ளியங்குடி, திருவிண்ணகர், திருநறையூர், திருச்சேறை, நந்திபுர விண்ணகரம் (நாதன் கோயில்) என்று அர்ச்சையிலே ஒரு தசாவதாரமாக திவ்ய தேசங்கள் சுற்றி விளக்கெரிய ப்ரகாசிப்பது திருக்குடந்தை. தூபம் கமழ நாதமுனிகள் வாயிலாக நாலாயிர ப்ரபந்தத்தை நமக்கு அளித்த பெருமான். தூயிலணை மேல் கண்வளரும் - மணிமய பணி தல்பசயனத்தில் உத்தான சயனம். எழுப்பீரோ - திருமழிசை பிரான் - நடந்தகால்கள் நொந்தவோ என்கிற பாசுரத்தில் எம்பெருமானை எழுப்பியது - என்று பலபடியால் இப்பாசுர அமைப்பு திருக்குடந்தை திவ்யதேசத்தை குறிப்பதாயிற்று.

**10. நோற்று- திரு இந்தளூர் (மாயவரம்)** மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார் - பரிமளரங்கனை மங்களாசாஸனம் செய்ய திருமங்கை மன்னன் வந்தபொழுது பெருமாள் வாயிலும் திறவாமல், வாய்திறந்து ஒருமாற்றமும் சொல்லாமல் சயனத்திலிருந்ததை குறிப்பிடுவது போல் அமைகிறது. கும்பகர்ணன் தோற்று, உமக்கு தூக்கத்தை கொடுத்தானே? எம்பெருமானே! உமக்காகவே, உம்மை அர்ச்சாவதாரத்தில் அனுபவிக்க வந்த என்னை அனுக்ரஹித்து இன்ன வண்ணம் மென்று காட்டீர் என்பது அருங்கலமே தேற்றமாய் வந்த திற என்பதற்கு சாலப்பொருத்தம்.

**11. பாசுரம் கற்றுக்கறவை: திருவாலி - நாங்கூர்** திவ்ய தேசங்கள்: செற்றார் திறலழிய சென்று செறுச் செய்யும் - என்பதாலே வீரரான பரகாலன் திருமங்கை மன்னனை குறிப்பதாக கொள்வோம். மேலும், குற்றமொன்றில்லாத கோவலர்தம் பொற்கொடி - திருமங்கை மன்னனை, பஞ்சஸம்ஸகாராதிகளை செய்து கொண்டு ஸ்ரீ வைஷ்வ ததீயாராதனம் செய்வித்த

## திருப்பாவையில் திவ்யதேச அனுபவங்கள்

ஸ்ரீ குமுதவல்லி நாச்சியாராக கொண்டு திருவாலி திவ்யதேசம் என அனுபவிப்போம். தை அமாவாசைக்கு திருமங்கை மன்னன் மங்களாசாஸனம் செய்ய, முகில் வண்ணன் பேர்பாட, எல்லா நாங்கூர் திவ்ய தேசத்து எம்பெருமான்கள் ஒருங்கே எழுந்தருள்வது - முற்றம் புகுவதாகக் கொண்டு இத்திவ்யதேச அனுபவம்.

**12. கனைத்திளம் கற்று: ஆழ்வார் திருநகரி:**

ஈதென்ன பேருறக்கம் - என்பதாலே ஆழ்வார் எம்பெருமானை அனுபவித்துக் கொண்டு திருப்புளியாழ்வார் கீழே எழுந்தருளி இருந்ததை குறிப்பிடுகிறது. பேருறக்கம்: உறக்கமாவது சாதாரண தூக்கம். பேருறக்கமாவது எம்பெருமானை அனுபவித்துக் கொண்டு யோகத்தில் எழுந்தருளியிருப்பது. அப்படி இருந்து ஆழ்வாரை மதுரகவிகள் அணுகி பிரார்த்திக்க அவருக்கு திருவாய் மொழியை அநுக்ரஹித்து - கன்றுக் கிரங்கி என்பதாக கொள்ள பிராப்தம். பின்பு ஸ்ரீமந்நாதமுனிகளுக்கும் இரங்கி நாலாயிரத்தையும் யோகதசையில் அநுக்ரஹித்தும் கன்றுக்கு இரங்கி .. பால் சோர என்றும் கொள்ளலாம். ஆழ்வார் மனத்துக்கினையானை பாடவும் வாய் திறந்து ப்ரபந்தம் அருளிச் செய்ததாலும், இப்பாசுரம் ஆழ்வார் திருநகரி திவ்ய தேசத்துக்காயிற்று.

**13. புள்ளின்வாய் கிண்டாணை: திருவெள்ளியங்குடி:**

கோலவில்லி ராமன் தன் கோயில் - பொல்லா அரக்கனை கிள்ளி - என்ற பாசுர பதத்திற்கு அனுகுணமாக அமைந்தது. வெள்ளி எழுந்து = வெள்ளியார் வணங்க விரைந்து அருள் செய்வான் என கலியன் அருளியதற்கு அந்வயம். எனவே இப்பாசுரம் திருவெள்ளியங்குடிக்கு ஆயிற்று.

**14. உங்கள் புழக்கடை தோட்டத்து வாவியுள்: திருவெள்ளறை:**

திருவரங்கம் திருப்பதிக்கு பின்புறம் கொள்ளிடத்திற்கு வடக்கு புறம் (புழக்கடை) தோட்டம் -வாவி - திருவெள்ளறை திவ்ய தேசத்தில் புஷ்கரணி ப்ரசித்தம் ஸ்வஸ்திக் வடிவத்தில் உள்ளது வாவி.

பங்கய கண்ணானைப் பாடு - திருவெள்ளறை எம்பெருமான் புண்டரீகாக்ஷன் என்பதாலும் இப்பாசுரம் திருவெள்ளறை திவ்ய தேசத்திற்கு கொள்ளலாம்.

## திருப்பாவையில் திவ்யதேச அனுபவங்கள்

**15. எல்லே இளங்கிளியே: திருவாய்ப்பாடி அனுபவம் :**

இப்பாசுரத்தில் வல்லானை கொன்றானை மாற்றானை மாற்று அழிக்க வல்லானை மாயனைப் பாடு என்று நாச்சியார் அருளிச் செய்கிறார். (இளங்கிளிகளான) கோபிகைகள் கண்ணனை ஸதா கானம் செய்த இடம் திருவாய்ப்பாடி என்கிறார் ஸுகப்ரஹ்மரிஷி. உத்காயதீநாம் அரவிந்த லோசநம் வ்ரஜாங்கநாநாம் திவம் அஸ்ப்ருஸத் த்வநி: த்தயெளக நிர்மந்தந ஶப்த மிஶ்ரிதோ நிரஸ்யதே யேந திஶாம் அமங்களம் என்கிற பாகவத ஶ்லோகத்தை அனுசரித்து இவ்வனுபவம்.

**16. நாயகனாய: துவாரகை** - இந்த திவ்ய தேசத்தில் இன்றும் பெரிய கொடி தினமும் ஏற்றுகிறார்கள். மிகப்பெரிய கொடி - நாயகனாய் நின்ற கண்ணனுடைய கோயில் பெரிய கொடி, நம்மாழ்வாரும் மன்னப்படு மறைவாணனை வண்துவபாரதி மன்னனை என்று துவாரகாதீசனை ஏத்துமின் ஏத்துதலும் தொழுதாடுமே என்றும் அருளியுள்ளபடி இங்கு வந்து வாயிலில் உள்ள கோபியர்கள் த்வாரகாதீசனை ஏத்தி பறை கொள்வதற்கு வந்தாலும், அவனுடைய சேவகத்தையே குறிக் கொண்டவர்கள் ஆதலாலும், இப்பாசுரம் த்வாரகா க்ஷேத்ரத்துக்குக் கொள்ளலாம். துவரை என்னும் அதில் நாயகனாகி வீற்றிருந்த மணவாளன் என்றார் ஸ்ரீ பெரியாழ்வார்.

**17. அம்பரமே, தண்ணீரே: திருத்தண்கா** - தூப்புல் குலவிளக்கே - என்ற பதம் தீபப்ரகாச எம்பெருமானை குறிப்பதாக கொள்வோம். மேலும் தூப்புல்குல விளக்கான ஸ்வாமி தேசிகனை நமக்கு அநுக்ரஹித்தவர் தீபப்ரகாசர்: திருமங்கை மன்னன் விளக்கொளியை மரதகத்தை திருதண்காவில் என்று இவ் எம்பெருமானை மங்களாசாஸனம் செய்து கொண்டார் - இப்பாசுரம் திருத்தண்கா திவ்யதேசத்துக்கு.

**18. உந்து மதகளிற்றன்** - பிராட்டி பாசுரம் : திருவஹிந்திரபுரம் அனுபவம். கவி கதக கடா (மதயானைக் கூட்டத்திற்கு) கேசரீயாய், வாதயுத்தத்தில் ஓடாத வலிமையுள்ளவராய், பிராட்டியின் பெருமையை நிலை நாட்டினவரான ஸ்வாமி தேசிகன் பல்காலும் தேவநாயக பஞ்சாஶத், அச்யுத ஶதகம், மும்மணிக்கோவை, நவமணி மாலை, பந்து, கழல், அம்மானை, ஊசல், ஏசல் என்று (பல்கால் குயிலினங்கள் இனிமையாய் கூவுவதுபோல்) பாசுரங்களை பிராட்டி பாவனையில் அருளிய திவ்யக்ஷேத்ரம்.

## திருப்பாவையில் திவ்யதேச அனுபவங்கள்

**19. குத்து விளக்கெரிய: திருநறையூர்:**

திருமங்கை மன்னனுக்கு பஞ்சஸம்ஸ்காரம் செய்து ஞான விளக்கை ஏற்றிய எம்பெருமான் திருநறையூர் நம்பியே. ஆழ்வாரேநந்தா விளக்கின் சுடரே, நறையூர் நின்ற நம்பி என்ற மங்களாசாஸனம் செய்கிறார். குத்து விளக்குக்கு ஐந்து முகங்கள் இருக்குமாப்போல் திருமங்கை மன்னன் ஐந்து ப்ரபந்தங்களில் இந்த திருநறையூர் நம்பியை மங்களாசாஸனம் செய்கிறார். ஆகையால் இப்பாசுரம் திருநறையூர் நம்பிக்கு

**20. முப்பத்து மூவர்:- திருநீர்மலை** - இப்பாசுரத்தில் நாச்சியார், கலியே, செப்பமுடையார், திறலுடையாய், விமலா என்று கிருஷ்ணனை கூப்பிடுகிறாள். மங்கை மன்னன், திருநீர்மலை பதிகத்தில் நான்கு பதங்களை இட்டு பெருமாளை மங்களாபுஸாஸனம் செய்கிறார். நின்றான், இருந்தான், கிடந்தான், நடந்தான் - அவனுக்கு இடம் மாமலையாவது நீர்மலையே என்பதாகும் அப்பதங்கள். ஆக இப்பாசுரம் நான்கு எம்பெருமான்கள் எழுந்தருளியுள்ள திருநீர்மலை திவ்யதேச அனுபவம்.

**21. ஏற்றகலங்கள்:- திருநாராயணபுரம்:** ஒருநாயகமாய் பதிகம் திருநாரணனுக்கு என்று எம்பெருமானார் அபிமானித்ததாயிற்றே. எதிர் பொங்கி மீதளிக்கும் பலபல வள்ளல்களான சிஷ்யர்களை ஆற்றப் படைத்த யதிராஜரின் மகன் போல் அபிமான புத்ர ஸ்தாநீயரான செல்வப் பிள்ளை ஸ்ரீ ஸம்பத் குமாரப் பெருமாள் இப்பாட்டுக்கு உரியவர். யதிராஜரால் ஸ்தாபிக்கப் பெற்று உலகில் தோற்றமாய் நிற்கும் சுடர் அல்லவா செல்வப்பிள்ளை.

**22. அங்கண் - திருவனந்தபுரம்** - அநந்த பத்மநாபன் பெருமாளிடம் தன்னுடைய ஸர்வத்தையும் அர்ப்பணித்து அவருக்கே தாஸன் என்று இருப்பவர்கள் திருவனந்தபுரத்து அரசர்கள் - இன்றளவும் பெருமாளின் பள்ளிக் கட்டில் கீழே - இப்பாசுரம் திருவனந்தபுரத்துக்கு என ஆகலாம்.

**23. மாரிமலை முழைஞ்சில்:- அஹோபிலம்** - இப்பாசுரத்திலேயே ப்ரத்யக்ஷமாக சீரிய சிங்கம் அறிவுற்று தீவிழித்து என்று கோதைபிராட்டி அருளுவதால் இப்பாசுரம் - அஹோபிலத்துக்கு. அஹோபிலம் எம்பெருமான் அங்கிருந்து புறப்பட்டு எல்லா க்ஷேத்ரங்களுக்கும் எழுந்தருள்வது யாம் வந்த கார்யத்தை ஆராய்ந்து அருள்வதற்கே.

**24. அன்றிவ்வுலகம் - உலகளந்த பெருமாள் (காஞ்சி)**

## திருப்பாவையில் திவ்யதேச அனுபவங்கள்

**25. ஒருத்தி - திருசித்ரகூடம்** - ஒருத்தி மகனாய் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் வளர்ந்தவன் கோவிந்தராஜன். க்ருமி கண்ட சோழன் காலத்தில் இத்திவ்யதேசத்து எம்பெருமானுக்கு ஏற்பட்ட நலிவை கண்டு ஸ்ரீ பாஷ்யகாரர் திருப்பதியில் தனிகோவில் ஸ்தாபிக்கிறார். பிறகு சிலகாலம் சென்ற பின் மறுபடியும் தில்லையிலேயே திருக்கோயில் ஸ்தாபிக்கப்படுகிறது. இந்த ஸம்பவம் ஓரிடத்தில் பிறந்து (தில்லையிலே) ஓரிடத்தில் வளர்ந்து (திருப்பதி) மறுபடியும் தில்லைக்கு திரும்பியதற்கு ஒப்புடையதாக கொண்டால் இப்பாசுரம் தில்லை திருச்சித்ர கூடத்திற்கு ஆகும்.

**26. மாலை மணிவண்ணா:- திருவல்லிக்கேணி** - பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே என்று நாச்சியார் வாக்கு - திருவல்லிக்கேணி மூலவர் ஸ்ரீ வேங்கட க்ருஷ்ணன் பாஞ்ச சன்யம் ஹ்ருஷீகேச: என்னலாம்படி வலது திருக்கையில் சங்கத்தை மட்டும் சாற்றிக் கொண்டு உள்ளார். அச்சங்கம் தான் ஞாலத்தை நடுங்கமுரச் செய்தது. ஸகோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநி வ்யதாரயத் என்னும்படி. பல்லாண்டு இசைப்பாரே - இன்றளவும் பல்லாண்டு இசைக்கும் அத்யாபக கோஷ்டி விலக்ஷணமான ஒன்று. எனவே இப்பாசுரம் திருவல்லிக்கேணி.

**27. கூடாரை திருமாலிருஞ்சோலை** - பாற்சோறு மூடநெய்பெய்து என்ற மங்களாசாஸனம். நாச்சியார் திருமொழியில் நூறுதடா நிறைந்த அக்காரவடிசல் சொன்னேன் என்றபடி ஸ்ரீ பாஷ்யகாரரர் ஆண்டாளின் ஆசையை திருமாலிருஞ்சோலை எம்பெருமானிடம் ஸமர்ப்பித்தது இப்பாசுரத்துக்குத் தகும். எனவே இப்பாசுரம் திருமாலிருஞ் சோலைக்கே.

**28. கறவைகள் - நைமிசாரண்யம்:**

கானம் சேர்ந்து உண்போம் - பல புராணங்கள் இந்த திவ்யதேசத்திலேயே அவதரித்துள்ளன. ஶௌனகாதி ரிஷிகள் நைமிசாரண்யத்தில் இருந்து பல யக்ஞங்கள் செய்ததாக புராணங்கள் பேசும். ஸதாசார்யங்கள் பின் சென்று (கறவைகள் பின் சென்று) பல ரிஷிகள் பகவத் குணங்களை அனுபவித்த ஷேத்திரம் (உண்போம்) உண்ணும் சோறும் பருக நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் என்னும்படி அனுபவித்த ப்ரதேசம். கலியன் வாணிலா முறுவல் பதிகத்தில், அறியாத பிள்ளைகளாய் செய்த விஷயங்களை வெறுத்து திருவடியடைந்தேன் நைமிசாரண்யத்துள எந்தாய் - என்பது அறியாத பிள்ளைகளுக்கு அந்வயம்.

## திருப்பாவையில் திவ்யதேச அனுபவங்கள்

**29. சிற்றம் சிறுகாலே - தேரழுந்தூர்:**

ஆமருவியப்பன், கோஸகன் என்ற திருநாமங்களுடன் ஸேவை ஸாதிக்கும் எம்பெருமான்.

கலியன் பாசுரம் ஆரம்பிக்கும் போது தந்தை காலில் பெருவிலங்கு தாளவிழ, நள்ளிருட்கண் வந்த எந்தை பெருமானார் மருவி நின்றவூர் போலும் என்ற க்ருஷ்ணாவதார எம்பெருமான் திகழ்கின்ற திவ்யதேசம் என்று ஸாதிக்கிறார். பெற்றம் மேய்த்து உண்ணும் குலம் அதில் பிறந்தவனே கோசகன்.

பொற்றாமரை அடியே போற்றும் பொருள்: அந்தோ நின்னடியன்றி மற்றறியேன், ஐயா நின்னடியன்றி மற்றறியேன், அண்டா நின்னடியன்றி மற்றறியேன், ஆயா நின்னடியன்றி மற்றறியேன் என்று கலியன் போற்றிய திருவடிகள் தேரழுந்தூர் பெருமாளுக்கு. குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது - திருமாலே இனிச்செய்வது ஒன்று அறியேன், ஆவா என்று அடியேற்கு இரை இரங்காய் என்பது உற்று நோக்க ஒக்கும் - இப்படி பல படிகளாலே இப்பாசுரம் தேரழுந்தூர் திவ்ய தேசத்திற்கு சாரும்.

**30. வங்கக்கடல் - ஸ்ரீவில்லிபுத்தூர்:** இப்பாசுரத்தில் நாச்சியரே அணி புதுவை என்று ஸ்ரீவில்லிபுத்தூர் முத்ரை வைத்துள்ளபடியால் இப்பாசுரம் இந்த திவ்யதேசத்தை சாரும்.

இவ்வாறு திருப்பாவையில் திவ்யதேசங்களை அனுபவிக்க ஆசார்யன் திருவடி நிலைகளைப் பற்றி இறங்கினேன். ஏற்கத்தக்கவை என்றால் கொள்ளலாம். தகாதவை என்றால் அடியேனை திருத்திப் பணிகொள்ள வேணும் என்று ப்ரார்த்திக்கிறேன்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

தி.ச.ச.நா. சின்னாமு,
ராமானுஜ பாட்ராச்சாரியர்,
திருக்குடந்தை

# நாலாயிர திவ்யப் பிரபந்தம் (அட்டவணை)

| ஆழ்வார்களின் திருநாமம் (பெயர்) | திவ்ய பிரபந்தம் (நூல்) | பாசுரம் (பாடல்கள்) |
|---|---|---|
| பெரியாழ்வார் | திருப்பல்லாண்டு | 12 |
| | திருமொழி | 461 |
| ஆண்டாள் | திருப்பாவை | 30 |
| | நாச்சியார் திருமொழி | 143 |
| குலசேகர ஆழ்வார் | பெருமாள் திருமொழி | 105 |
| திருமழிசையாழ்வார் | திருச்சந்த விருத்தம் | 120 |
| | நான்முகன் திருவந்தாதி | 96 |
| தொண்டரடிப் பொடியாழ்வார் | திருமாலை | 45 |
| | திருப்பள்ளி எழுச்சி | 10 |
| திருப்பாணாழ்வார் | அமலனாதிபிரான் | 10 |
| மதுரகவியாழ்வார் | கண்ணிநுண்சிறுத்தாம்பு | 11 |

| ஆழ்வார்களின் திருநாமம் (பெயர்) | திவ்ய பிரபந்தம் (நூல்) | பாசுரம் (பாடல்கள்) |
|---|---|---|
| திருமங்கையாழ்வார் | பெரிய திருமொழி | 1084 |
| | திருக்குறுந்தாண்டகம் | 20 |
| | திருநெடுந்தாண்டகம் | 30 |
| | திருஎழுகூற்றிருக்கை | 1 |
| | சிறிய திருமடல் | 40 |
| | பெரிய திருமடல் | 78 |
| பொய்கையாழ்வார் | முதல் திருவந்தாதி | 100 |
| பூதத்தாழ்வார் | இரண்டாம் திருவந்தாதி | 100 |
| பேயாழ்வார் | மூன்றாம் திருவந்தாதி | 100 |
| நம்மாழ்வார் | திருவிருத்தம் | 100 |
| | திருவாசிரியம் | 7 |
| | பெரிய திருவந்தாதி | 87 |
| | திருவாய்மொழி | 1102 |
| திருவரங்கத்தமுதனார் | இராமானுச நூற்றாந்தாதி | 108 |

## கைங்கர்ய ஸபாவின் வளர்ச்சிப் பணிகள்.

- 1963 ஆம் ஆண்டு ஸ்ரீ பூமிநீளா ஸமேத ஸ்ரீ ஆதி கேஸவப் பெருமாள் திருக்கோயிலின் கைங்கர்ய ஸபா துவங்கப்பட்டது,
- சபாவின் முதல் தலைவர்-**சி. பட்டு சாமி**, காரியதரிசி. **எம்.ரங்கசாமி**, பொருளாளர்கள் **எம்.எஸ்.ராஜகோபாலன்** மற்றும் **எம்.எஸ்.ஸ்ரீனிவாசன்.**
- 1963 ஆம் ஆண்டு கைங்கர்ய ஸபா உறுப்பினர்களும் ஊர் மக்களும் ஒன்றுக்கூடி திருக்கோயிலில் ஆசார்யன் விக்ரஹம் இல்லாத குறையை உணர்ந்தனர்.
- அதன்படியே ஸ்ரீ வேதாந்த தேசிகரின் விக்ரஹம் 1964 ஆம் ஆண்டு வார்ப்பிக்கப்பட்டு, அதனோடேயே ஸம்பரோக்ஷணமும் நடந்தேறியது.
- ஸ்ரீ வேதாந்த தேசிகரின் திருநஷத்ர மஹோத்ஸவம் மற்றும் தனுர் மாத பூஜாக்ரமங்கள் திருக்கோயில் நிர்வாகிகளால் முறையே நடத்தப்பட்டன.
- 2004ல் மதில் சுவர், திருமடப்பள்ளி புதுப்பிக்கப்பட்டு,கருட மண்டபமும் கட்டப்பட்டு,திருக்கோயில் பொலிவு பெறத் துவங்கியது.
- ஸ்ரீமத் கோழியாலம் ஸ்வாமியின் அவதார ஸதலமானதால், சிஷ்யர்களின் விருப்பத்திற்கிணங்க சிலை திருக்கோயிலினுள் ப்ரதிஷ்டை செய்யப்பட்டது.
- 2009 ல் திருக்கிணறு எடுக்கப்பட்டது.
- 2011ல் திருக்கோயில் நிலத்தில், நந்தவனம் அமைக்கும் பொருட்டு, சுற்றிலும் முள்வேலி போடப்பட்டது.
- திருக்கோயிலுக்கென, ப்ரத்யேக வலை தளம் அமைக்கப்பட்டது. www.aadhikesavaperumal.com முக்கிய நிகழ்வுகளும்,புகைப்படங்களும் அதில் பதிவாகத் துவங்கின.
- 2011-2012ல் புதிய முயற்சியாய் ஸ்ரீ ஆதிகேஸவ திவ்ய பாதுகா என்ற பஞ்சாங்கத்தை ஸபா வெளியிட்டது. தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. இதில் கோயிலின் உத்ஸவாதிகள், உபயதாரர்கள் பட்டியல் மற்றும் விசேஷ குறிப்புகள் அச்சிடப்பட்டுள்ளன. தற்சமயம் அனைத்து உத்ஸவங்களும், உபயதாரர்களின் ஆதரவால் நடத்தப்படுவது குறிப்படத்தக்கது.

## கைங்கர்ய ஸபாவின் வளர்ச்சிப் பணிகள்.

- ஸ்ரீ ஸ்வாமி தேசிகர் மண்டபம் 2012 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.
- ஸ்ரீ பாஷ்யகார் (உத்ஸவர்) பிரதிஷ்டை - 2012. **உபயம்** : யாகபுரம் ஸ்ரீ கோவிந்தராஜ ஐயங்கார், வேளச்சேரி.
- பெருமாளுக்கு திருமஞ்ஜனம் செய்ய மரத்தினால் ஆன மேடை **உபயம்** : மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் சம்பத் ஐயங்கார் குமாரர் S.ராமதுரை (MGR நகர்)
- ஆவணி மாதம் 2014ல் பவித்ரோத்ஸவம் நான்கு நாட்கள் வெகு ஸ்ரத்தையாக நடந்தேறியது.
- ஸ்ரீ சக்கரத்தாழ்வார் (ஸ்ரீ சக்கரம்) பிரதிஷ்டை 26.01.2015. **உபயம்** ஸ்ரீ K. குப்புஸ்வாமி ஐயங்கார், களத்தூர்
- பெருமாளுக்கு திருவாச்சி ஸ்தாபிக்கப்பட்டது. **உபயம்** மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் சேஷாத்திரி குமாரர் ஸ்ரீ ராஜன் அவர்கள், உள்ளகரம்.
- ஒரு வருடத்திற்கு பெருமாளுக்கு நித்தியபடி அரிசி **உபயம்** : மணப்பாக்கம் ஈயுண்ணி சந்தானம் ஐயங்கார்.
- ஸபாவிற்கு நாற்காலி வழங்கியவர்கள் மணப்பாக்கம் ஸ்வச்சன்னம் திரு. M.N. வெங்கடேஷ், அஸ்தினாபுரம். (20 Nos) குன்னவாக்கம் ஸம்பத் ஐயங்கார், மேற்கு மாம்பலம்.
- கைங்கர்ய ஸபா, வருடா வருடம் பகவத் க்ருபையாலும், பாகவதர்களின் கைங்கர்யத்தாலும் (தமது சீரிய பணியால்) திருக்கோயிலை மெருகேற்றி சிறப்பித்து வருகின்றது.

சித்திரை - திருவாதிரையில் அவதரித்த

## ஸ்ரீ பகவத் ராமானுஜர்

உடையவர், யதிராஜர், எம்பெருமானார், பாஷ்யகாரர், இளையாழ்வார்,
லக்ஷ்மணமுனி என்றெல்லாம் போற்றப்படுபவர்.
(அவதார ஸ்தலமான ஸ்ரீபெரும்புதூரில் ஸேவை சாதிக்கிறபடி)



புரட்டாசி - திருவோணத்தில் அவதரித்த

## ஸ்ரீ ஸ்வாமி தேசிகன்

விஷ்ணுகண்டாவதாரம், வேங்கடநாதன், கவிதார்க்கிக ஸிம்ஹம்,
ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர், தமிழ்மறையோன் என்றெல்லாம் போற்றப்படுபவர்,
(அவதார ஸ்தலமான தூப்புலில் ஸேவை ஸாதிக்கிறபடி)



## கைங்கர்ய ஸபா நிர்வாக கமிட்டி உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| ஸ்ரீ D.ரங்கஸ்வாமி | தலைவர் | 98414 81241 |
| ஸ்ரீ V.ரங்கராஜன் | துணைத் தலைவர் | 90477 66000 |
| ஸ்ரீ S.ஸ்ரீ ராமபிச்சை | செயலாளர் | 94442 05290 |
| ஸ்ரீ N.ரவி (எ) கோதண்டராமன் | இணை செயலாளர் | 94440 33803 |
| ஸ்ரீ V.ரங்கன் | பொருளாளர் | 94444 20999 |
| ஸ்ரீ M.S.சேஷாத்திரி | உறுப்பினர் | 94442 79304 |
| ஸ்ரீ S.ஸ்ரீநிவாசன் | உறுப்பினர் | 98655 64311 |
| ஸ்ரீ K.S.L.ரவி | உறுப்பினர் | 94439 13844 |
| ஸ்ரீமதி வைஜெயந்தி | உறுப்பினர் | 97508 09667 |
| ஸ்ரீ S.ரமேஷ் | உறுப்பினர் | 93810 52964 |
| ஸ்ரீ V.S.சேஷாத்திரி | உறுப்பினர் | 81484 42036 |

ஸ்ரீ :

ஸ்ரீ ராமஜயம்

# ஸ்ரீ ஆதிகேஸவ திவ்ய பாதுகா - 5



## ஸ்ரீ பூமிநீளா ஸமேத ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில்

**(தமிழக அரசின் H.R. & C.E. யின் ஆளுகைக்கு உட்பட்டது)**

மணப்பாக்கம் கிராமம் (ஸுகந்தபுரம்) செங்கல்பட்டு – 603 111

## மன்மத வருஷ (2015- 2016) உத்ஸவாதிகள்

---

**வெளியீடு : ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் கைங்கர்ய ஸபா**

137/60, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், சென்னை – 600 004

போன் : 24994503, 98414 81241, 94442 05290, 94444 20999

BOOK-POST

ஸ்ரீ :

ஸ்ரீ ராமஜயம்

# ஸ்ரீ பூமிநீளா ஸமேத ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயில்


(தமிழக அரசின் H.R. & C.E. யின் ஆளுகைக்கு உட்பட்டது)

## ஸ்ரீ ஆதிகேசவ திவ்ய பாதுகா - 5

## மன்மத வருஷ (2015 - 2016) உத்ஸவாதிகள்

---

To




**ஸ்ரீ ஆதிகேசவப் பெருமாள் கைங்கர்ய ஸபா**

137/60, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர்

சென்னை - 600 004

போன் : 24994503, 98414 81241, 94442 05290, 94444 20999